Registered as a News Paper

பக்கங்கள் 04

விலை: ரூபா 5-00

# ஈழநாதம்

THE EELANAATHAM

Peoples Daily

மக்கள் தினசரி

[05-04-1993] திங்கட்கிழமை ஓசை 46

நாதம் 04 திருவள்ளுவர் ஆண்டு 2024 பங்குனி 23

## மணித்தியாலத்திற்கு ஒருவர் இலங்கையில் தற்கொலை

சிறிலங்காவில் மணித்தியாலத்திற்கு ஒருவர் தற்கொலை செய்வதாக டி. பி. ஏ. என்ற ஜேர்மானிய செய்தித் ஸ்தாபனம் விஷேட செய்தி ஒன்று வெளியீட்டுள்ளது. சிறிலங்காவில் 1991 இல் 8,000 பேர் தற்கொலை செய்ததாக வெளியான புள்ளிவிபரம் குறைத்து மதிப்பிடப்பட்ட தொகை என்று டி. பி. ஏ. தெரிவிக்கின்றது. இந்த புள்ளிவிபர அறிக்கையில் வட பகுதி சேர்க்கப்படவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. கொழும்பிலுள்ள சுமித்திரியோ உளவள நிலையத்துக்கு உளவளத் துணை கோரிச் செல்லும் 5,000 முதல் 6,000 பேரில் 15 முதல் 20 விகிதத்தினர் தற்கொலை எண்ணமுடையவர்கள் என்று அந் நிலையத்தின் பணிப்பாளர் தெரிவித்துள்ளார். சிறிலங்காவில் தற்கொலை செய்பவர்களில் 20 விகிதத்தினர் கிருமிநாசினி அருந்திச் சாவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

# கட்டுவனில் கடும் சண்டை இழப்புடன் படை திரும்பியது

[யாழ்ப்பாணம்]

கட்டுவன் பகுதி காவலரணிலிருந்து வெளியேறிய இராணுவத்தினருக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையில் நேற்றுக் காலை கடும் மோதல் மூண்டது. இம் மோதலின் போது இராணுவத்திற்கு உ தவியாக உலங்குவானூர்தி ஒன்று தாக்குதல் நடத்திய வேளை, முகாமி லிருந்தும் பலத்த எறிகணை வீச்சும் இடம்பெற்றது. இருப்பினும் விடுதலைப்புலிகள் மேற் கொண்ட உக்கிரதாக்குதலினால் இராணுவம் பின்வாங்க வேண்டிவந்தது. இம்மோதலின் போது விடுதலைப்புலிகள் தரப்பில் ஒரு போராளி வீரச்சவடைந்தார்.

வலிகாமம் கட்டுவன் பகுதி காவலரணில் இருந்து 200யார் முன்னேறி தடைகளை அகற்ற வந்த சிறிலங்கா இராணுவத் தினர் மீதே விடுதலைப் புலி கள் இத் தாக்குதலை நடத்தினர். விடுதலைப் புலி களின் தாக்குதலால் இராணு வத்தினர் இழப்புகளுடன் பின் வாங்கிச் சென்றனர்.

நேற்றுக்காலை 7. 30 மணி யளவில் இடம்பெற்ற இத் தாக்குதலின்போது முகாமிலி ருந்து எறிகணைத் தாக்குத லும் ஹெலிக்கொப்டரிலிருந்து 50 கலிபர் தாக்குதலும் மேற் கொள்ளப்பட்டன.

இதேவேளை முகாமிலிருந்து நேற்று பகல் 12.30 மணிவரை சிறிலங்கா இராணுவத்தினர் குடிமனைகளை நோக்கி பல த்த எறிகணை வீச்சை நடாத் தினர். இவ் எறிகணைகள் கட்டுவன் முனியப்பர் கோவி லைச் சூழவுள்ள பகுதிகளில் வீழ்ந்து வெடித்ததால் அப்பகு தியிலுள்ள வீடுகள் சில சேத மடைந்தன.

மேலும் ஏழாலை வடக்குப் பகுதியில் குடிமனைகள் மீது கட்டுவன் இராணுவத்தினர் மேற்கொண்ட துப்பாக்கிபிர யோகத்தின்போது பாஸ்கரன் (வயது 23) என்பவர் காய மடைந்து யாழ் போதனா வைத்தியசாலைக்கு கொண்டு செல்லப்பட்டார். (09,11)

## வீரச்சாவு



லெப். பெருந்தேவன்

கட்டுவன் காவலரண் பகுதியில் சிறிலங்காப் படை யினருடன் நேற்றுநடைபெற்ற

## ராணுவம், கடற்படை மீனவர்கள் மீது தாக்கு

(தொல்புரம்)

காரைநகர் கசூரனாபீச் கரையோரக் காவல் நிலைகளி லுள்ள சிறிலங்கா ஆயுதப் படையினர் நேற்றுக் காலை 6. 20 மணியளவில் சுழிபுரம் ...வுக்கடித்துறையை அண் மித்த கடற்பரப்பில் தொழி லில் ஈடுபட்டிருந்த மீனவர் களை நோக்கி கலிபர் தாக்கு தலை மேற்கொண்டனர்.

மேலும் காலை 7.15 மணி யளவில் சுழிபுரம் திருவடி நிலை, புளியந்துறைக் கடற் பரப்பில் மீன்பிடித்துக்கொண் டிருந்த மீனவர்கள் மீது சிறி லங்கா கடற்படையினரின் ரோந்துப் படகு ஒன்றிலிருந்து பீரங்கித்தாக்குதலையும், துப் பாக்கிப் பிரயோகத்தினையும் மேற்கொண்டனர்.

கிலோமீறறர் தூரத்திலிருந்தே தாக்குதலை நடாத்தியது. இச் சம்பவத்தில் உயிர்ச் சேதங்கள் எதுவும் ஏற்படவில்லையெனத் தெரியவருகிறது. (41)

## மட்டு. 40ஆம் கிராமத்தில் மூன்று பொதுமக்கள் கைது

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு 40 ஆம் கிரா மத்தில் உள்ள சிறிலங்கா இரா ணுவத்தினர் கடந்த திங்கள் அன்று மூன்று பொதுமக்களை கைதுசெய்து முகாம் கொண்டு சென்றனர்.

அன்று காலை 9 மணியள வில் வெளியேறிவந்த சிறி லங்கா இராணுவத்தினர் அக் கிராமத்தைச்சேர்ந்த மூவரைக் கைதுசெய்து விசாரித்தபின்,

என்பவரைக் கடுமையாகத் தாக்கிவிட்டு தடுத்துவைத்துள் ளனர். ஏனைய இருவரும் விடு விக்கப்பட்டனர்.

## அடுத்த வாரம் உச்சியில் சூரியன்

நடுஉச்சிக்குசூரியன்ஏப்ரல்12 ஆம் திகதி பிற்பகல் 12.12 மணிக்கு வவுனியாவிலும் ஏப் ரல் 13 ஆம் திகதி 12.11 க்கு

# இனப்பிரச்சினை தீர்வில் அவுஸ்திரேலியா அக்கறை

## கண்காணிப்பு குழு அமைக்க சிபாரிசு

(சிட்னி)

அவுஸ்திரேலிய பாராளுமன் றத்தின் வெளிவிவகாரம் மற் றும் பாதுகாப்பு துறைகளின் கூட்டுக்கமிட்டியானது அவுஸ்தி ரேலியா அரசிடம் கனேடிய அரசுடனும் மற்றும் ஐ. நா அல்லது பொதுநலவாய அமைப்புகளுடனும் இணைந்து சிறிலங்கா இனப் பிரச்சினை க்கு தீர்வு காண்பதற்கான பேச்சுவார்த்தை முயற்சிகளில் கண்காணிப்பாளராக பங்கு கொள்வதற்கான குழு ஒன்றை அமைக்கும்படி சிபாரிசு செய் துள்ளது.

கடந்த டிசம்பர் மாதத்தில் வெளியிடப்பட்டுள்ள இந்த அறிக்கை 218 பக்கங்கள் கொண்டதாகும். டிசம்பர் 91 முதல் ஜூன் 92 வரை இடம் பெற்ற அமர்வுகளின் போது சிறிலங்காவின் மனித உரிமை மீறல்கள் பற்றி குறிப்பிடப் பட்டிருப்பதுடன் பெருமளவி லான அநீதிகள் சிறிலங்கா அரசினால் இழைக்கப்பட்ட மையே இன்றைய நிலைக்கு காரணம் ஆகும் என்றும் தெரி விக்கப்பட்டுள்ளது.

# பௌத்த பேரினவாதமே பிரச்சினைக்கு காரணம்

## நியூயோர்க் ரைம்ஸ் தெரிவிப்பு

(நியூயோர்க்)

அமெரிக்க சஞ்சிகையான நியூயோர்க் ரைம்ஸ் சிறிலங்கா அரசின் இனவாதப் போக் கைக் கண்டித்து எழுதியுள் ளது.

நியூயோர்க் ரைம்ஸ், பெப்ர வரி 23, 1993 இதழில் எழுதி யுள்ள ஆசிரியத் தலையங்கத் தில், சிறிலங்காவின் இனப் பிரச்சினையை பௌத்த பேரி னவாத மதவெறி என்று வர் ணித்துள்ளது.

சிறிலங்கா அரசு பௌத்த பேரினவாதத்தை மற்ற இனங் களுக்கு எதிராகத் திருப்பியி ருக்கிறது என்றும் அதன் ஆசி ரியத் தலையங்கத்தில் குறிப் பிடப்பட்டுள்ளது.

## க.பொ.த. (சா/த) பரீட்சை முடிவுகள் வெளியாகின

(யாழ்ப்பாணம்)

1992டிசம்பரில் நடைபெற்ற கல்விப் பொதுத்தராதரசாதா ரண தரப் பரீட்சையின் யாழ். மாவட்டப் பாடசாலை மாண வர்களின் பெறுபேறுகள் நேற்று வெளியிடப்பட்டன.

''குமண'' கப்பல் மூலம் எடுத்துவரப்பட்ட இப் பெறு பேறுகள் நேற்றுக்காலையாழ். பிரதேசக்கல்வித்திணைக்களத் திற்குக் கொண்டுவரப்பட்ட தன்பின்னர் அந்தந்தப் பகுதி கோட்டக்கல்வி அலுவலகங் களுக்கு ஊடாகப் பாடசாலை களுக்கு விநியோகிக்கப்பட் டன.

தனிப்பட்ட பரீட்சார்த்தி களின் பெறுபேறுகள் நேற்றே தபாலில் சேர்க்கப்பட்டுள்ள தாக யாழ். பிரதேசக் கல்வித் திணைக்கள வட்டாரங்கள்

## பாடசாலைகள் சிலவற்றின் முடிவுகள் வரவில்லை

(யாழ்ப்பாணம்)

தீவுப்பகுதியிலிருந்து இடம் பெயர்ந்து வெவ்வேறு இடங் களிலும் இயங்கிவரும் பெரும்பாலான பாட சாலை மாணவர்களின் க. பொ.த.(சாதாரண) பரீட்சை முடிவுகள் நேற்று யாழ். கல் வித்திணைக்களத்திற்குஎடுத்து

புங்குடுதீவுக் கொத்தணி, ஊர்காவற்றுறைக் கொத்தணி மற்றும் வேலணைக் கொத் தணியில் ஒன்பது பாடசாலை கள், என்பவற்றின் முடிவுகள் தவிர்ந்த ஏனைய பாடசாலை களின் பெறுபேறுகள் எடுத்து வரப்படவில்லை என தெரிய வருகிறது. மேலும் வடமராட்

(தொல்புரம்)

காரைநகர் கசூரனாபீச் கரையோரக் காவல் நிலைகளிலுள்ள சிறிலங்கா ஆயுதப் படையினர் நேற்றுக் காலை 6.20 மணியளவில் சுழிபுரம் ... வுக்கடித்துறையை அண்மித்த கடற்பரப்பில் தொழிலில் ஈடுபட்டிருந்த மீனவர்களை நோக்கி கலிபர் தாக்குதலை மேற்கொண்டனர்.

மேலும் காலை 7.15 மணியளவில் சுழிபுரம் திருவடி நிலை, புளியந்துறைக் கடற்பரப்பில் மீன்பிடித்துக்கொண்டிருந்த மீனவர்கள் மீது சிறிலங்கா கடற்படையினரின் ரோந்துப் படகு ஒன்றிலிருந்து பீரங்கித்தாக்குதலையும், துப்பாக்கிப் பிரயோகத்தினையும் மேற்கொண்டனர்.

இவ் ரோந்துப் படகு கரையிலிருந்து சுமார் ஒன்றரைக் கிலோமீற்றர் தூரத்திலிருந்தே தாக்குதலை நடாத்தியது. இச் சம்பவத்தில் உயிர்ச் சேதங்கள் எதுவும் ஏற்படவில்லையெனத் தெரியவருகிறது. (41)

# மட்டு. 40ஆம் கிராமத்தில் மூன்று பொதுமக்கள் கைது

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு 40 ஆம் கிராமத்தில் உள்ள சிறிலங்கா இராணுவத்தினர் கடந்த திங்கள் அன்று மூன்று பொதுமக்களை கைதுசெய்து முகாம் கொண்டு சென்றனர்.

அன்று காலை 9 மணியளவில் வெளியேறிவந்த சிறிலங்கா இராணுவத்தினர் அக் கிராமத்தைச்சேர்ந்த மூவரைக் கைதுசெய்து விசாரித்தபின், பத்துப் பிள்ளைகளின் தந்தையான ஆறுமுகம் (வயது 60) என்பவரைக் கடுமையாகத் தாக்கிவிட்டு தடுத்துவைத்துள்ளனர். ஏனைய இருவரும் விடுவிக்கப்பட்டனர்.

மேலும் ஏழாலை வடக்குப் பகுதியில் குடிமனைகள் மீது கட்டுவன் இராணுவத்தினர் மேற்கொண்ட துப்பாக்கிபிரயோகத்தின்போது பாஸ்கரன்

## அடுத்த வாரம் உச்சியில் சூரியன்

நடுஉச்சிக்குசூரியன்ஏப்ரல்12 ஆம் திகதி பிற்பகல் 12.12 மணிக்கு வவுனியாவிலும் ஏப்ரல் 13 ஆம் திகதி 12.11 க்கு மன்னாரிலும் ஏப்ரல் 14 ஆம் திகதி 12 11க்கு கிளிநொச்சியிலும் ஏப்ரல் 15 ஆம் திகதி 12.11 மணிக்கு காங்கேசன்துறைக்கு மேலும் வரும்.



லெப். பெருந்தேவன்

கட்டுவன் காவலரண் பகுதியில் சிறிலங்காப் படையினருடன் நேற்றுநடைபெற்ற மோதலில் லெப். பெருந்தேவன்/மோகன் (சேனாதிராஜா

[4 ஆம் பக்கம் பார்க்க]

அரசின் இனவாதப் போக்கைக் கண்டித்து எழுதியுள்ளது.

நியூயோர்க் ரைம்ஸ், பெப்ரவரி 23, 1993 இதழில் எழுதியுள்ள ஆசிரியத் தலையங்கத்தில், சிறிலங்காவின் இனப் பிரச்சினையை பௌத்த பேரினவாத மதவெறி என்று வர்ணித்துள்ளது.

# க.பொ.த. (சா/த) பரீட்சை முடிவுகள் வெளியாகின

(யாழ்ப்பாணம்)

1992டிசம்பரில் நடைபெற்ற கல்விப் பொதுத்தராதரசாதாரண தரப் பரீட்சையின் யாழ். மாவட்டப் பாடசாலை மாணவர்களின் பெறுபேறுகள் நேற்று வெளியிடப்பட்டன.

''குமண'' கப்பல்மூலம் எடுத்துவரப்பட்ட இப் பெறுபேறுகள் நேற்றுக்காலையாழ். பிரதேசக்கல்வித்திணைக்களத்திற்குக் கொண்டுவரப்பட்ட தன்பின்னர் அந்தந்தப் பகுதி கோட்டக்கல்வி அலுவலகங்களுக்கு ஊடாகப் பாடசாலைகளுக்கு விநியோகிக்கப்பட்டன.

தனிப்பட்ட பரீட்சார்த்திகளின் பெறுபேறுகள் நேற்றே தபாலில் சேர்க்கப்பட்டுள்ளதாக யாழ். பிரதேசக் கல்வித்திணைக்கள வட்டாரங்கள் தெரிவித்துள்ளன. (பா)

## பாடசாலைகள் சிலவற்றின் முடிவுகள் வரவில்லை

(யாழ்ப்பாணம்)

தீவுப்பகுதியிலிருந்து இடம்பெயர்ந்து வெவ்வேறு இடங்களிலும் இயங்கிவரும் பெரும்பாலான பாடசாலை மாணவர்களின் க.பொ.த.(சாதாரண) பரீட்சை முடிவுகள் நேற்று யாழ். கல்வித்திணைக்களத்திற்குஎடுத்துவரபபடவில்லை என தெரியவருகிறது.

புங்குடுதீவுக் கோத்தணி, ஊர்காவற்றுறைக் கொத்தணி மற்றும் வேலணைக் கொத்தணியில் ஒன்பது பாடசாலைகள், என்பவற்றின் முடிவுகள் தவிர்ந்த ஏனைய பாடசாலைகளின் பெறுபேறுகள் எடுத்துவரப்படவில்லை என தெரியவருகிறது. மேலும் வடமராட்சிக் கோட்டத்திலுள்ள உடுத்

[4 ஆம் பக்கம் பார்க்க]

# நில்கிரி கப்பலில் வந்த 50 பரல் மண்ணெண்ணெய் காங்கேசன்துறை சென்றது

(வடமராட்சி)

யாழ். மாவட்டத்திற்கு 'நில்கிரி' கப்பலில் எடுத்துவரப்பட்ட 1750 பரல் மண்ணெண்ணெயில் 50 பரல் காங்கேசன்துறைக்கு நேற்று முன்தினம் மாலை எடுத்துச் செல்லப்பட்டது.

மண்ணெண்ணெய் பரல்கள் நேற்று முன்தினம் இறக்கி முடிக்கும் தறுவாயில் கொழும்பில் இருந்து கிடைத்த அவசர பணிப்பையடுத்து 50 பரல் மண்ணெண்ணெய்'நில்கிரி' கப்பலில் காங்கேசன்துறை சென்றது.

இரண்டாவது தடவையாக 'நில்கிரி' கப்பல் 750 பரல் மண்ணெண்ணெயுடன் வந்த போதும் 10 பரல் காங்கேசன் துறையில் இறக்கிவிட்டு பருத்தித்துறை துறைமுகத்திற்கு வந்ததும் தெரிந்ததே. [யோ]

# 1000மெற்.தொன் அரிசியுடன் நேற்று குமண வந்தது

## தபாற் பொதிகள் இல்லை

(வடமராட்சி)

பருத்தித்துறை இறங்குதுறைக்கு நேற்று காலை 'குமண' கப்பல் உணவு மற்றும் பொருள்களுடன் வந்து சேர்ந்தது.

இக்கப்பலில் அரிசி ஆயிரம் மெற்றிக்தொன், மா 500 மெற்றிக்தொன், சீனி 300 மெற்றிக்தொன், மைசூர் பருப்பு 50 மெற்றிக்தொன், பால்மா, மல்லி 25 மெற்றிக்தொன், பெருஞ்சீரகம் 10 மெற்றிக்தொன், சவர்க்காரம் 20 மெற்றிக்தொன், சின்னச்சீரகம் 10 மெற்றிக்தொன், பல்வேறு பொருள்கள் 580 மெற்றிக்தொன், டீசல் 22 பரல், மண்ணெண்ணெய் 13 பரல் —

மற்றும் சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்திற்கு மருந்துவகைகள், மண்ணெண்ணெய் 22பரல், சிறுவர் பராமரிப்பு நிறுவனத்திற்கு உரம், டீசல், பெற்றோல், யாழ்.பல்கலைக்கழகத்திற்கு மருந்துவகைகள், டீசல், மண்ணெண்ணெய், பெற்றோல், என்ஜின் ஒயில்.

இலங்கை வங்கிக்குப் பெற்றோல், இலங்கை வங்கி சம்பந்தமான தபாற்பொதிகள், கல்விக்கந்தோருக்கு கதிரைமேசைகள், துவிச்சக்கர வண்டி மேலும் யு.என். எச். சி ஆர். நிறுவனத்திற்கு டீசல், பெற்றோல், கச்சேரிக்கு மோட்டார் சைக்கிள் அத்தோடு கெயர் நிறுவனத்திற்கும்,

(04ஆம் பக்கம் பார்க்க)

# அம்புலன்ஸ், ஆட்டோ குமணவில் வந்தன

இலங்கை செஞ்சிலுவைச் சங்கத்திற்கு நோர்வே செஞ்சிலுவைச் சங்கம் அன்பளிப்புச் செய்த அம்புலன்ஸ்வண்டி மற்றும் யாழ். கல்வித் திணைக்களத்திற்கென கல்வி அமைச்சினால்வழங்கப்பட்ட ஆட்டோ ஒன்றும் நேற்று முன் தினம் காங்கேசன்துறை வந்தடைந்த ''குமண'' கப்பலில் எடுத்துவரப்பட்டுள்ளதாக தெரியவருகின்றது. [பா, நி]

## இன்று விநியோகம்

[யாழ்ப்பாணம்]

தொழில்நுட்பக் கல்லூரியில் தமிழ், ஆங்கில தட்டச்சுப் பயிற்சியைப் பின்பற்றிய மாணவர்களுக்கான இறுதிப் பரீட்சைக்கான வினாத்தாள்களும் அனுமதி அட்டைகளும் நேற்று யாழ்ப்பாணம் எடுத்துவரப்பட்டுள்ளன.

அனுமதி அட்டைகள் இன்றே பரீட்சார்த்திகளுக்கு விநியோகிக்கப்படும் என்று தெரியவருகிறது.

# தமிழ் காங். பிரதித்தலைவர் ஐ. தே. க. வில் இணைவு

## மாகாணசபை தேர்தலிலும் போட்டி

(கொழும்பு)

அகில இலங்கை தமிழ் காங்கிரஸின் பிரதித் தலைவர் மோதிலால் நேரு ஐ. தே. க வில் இணைந்து கொண்டார். நேற்று முன்தினம் இணைந்துகொண்ட இவர் எதிர் வரும் மாகாணசபைத் தேர்தலில் கொழும்பு மாவட்ட ஐ. தே. க. வேட்பாளராகவும் போட்டியிடவுள்ளார்.

இவரது அங்கத்துவ அட்டையை ஜனாதிபதி பிரேமதாசா ஐ. தே. க. தலைமையகத்தில்வைத்து கையளித்தார். மோதிலால் நேருவுக்கும் தமிழ்க்காங்கிரஸ் தலைவர் குமார் பொன்னம்பலத்திற்கும் இடையில் அண்மைக் காலங்களாக கருத்து முரண்பாடுகள் நிலவிவந்தமை தெரிந்ததே.

# பூஸா உண்ணாவிரதம் நேற்று கைவிடப்பட்டது

(கொழும்பு)

பூஸா தடுப்பு முகாமில் கடந்த இரண்டு வராகாலம் சாகும்வரை உண்ணாவிரதம் மேற்கொண்ட கைதிகள் நேற்றுப் பிற்பகல் தமது உண்ணாவிரதத்தைக் கைவிட்டனர் என பிந்திக்கிடைத்த செய்திகள் தெரிவிக்கின்றன.

மூன்று, நான்கு மாதங்களுக்கிடையில் கைதிகளுக்கு எதிரானவழக்குகள்விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டுத் தீர்ப்பு வழங்கப்படும் என்று பாதுகாப்பு அமைச்சு அதிகாரி

[4 ஆம் பக்கம் பார்க்க]

# கற்பூரக் குண்டு விவகாரம் நாசகார சதிவேலை அம்பலம்

## கைதாகிய இருவர் விசாரணையின் பின் விடுதலை

(யாழ்ப்பாணம்)

கற்பூர துண்டுகளின் நடுவே C-4 வெடிமருந்துகளை வைத்து பொதிசெய்யப்பட்ட அதி உயர் சக்திவாய்ந்த வெடிகுண்டு தொடர்பாக விடுதலைப் புலிகளால் கைதுசெய்யப்பட்ட இருவர் விபரம் புரியாத நிலையில் உளவாளிகளால் பயன்படுத்தப்பட்ட பொதுமக்கள் என விசாரணையில் இருந்து தெரியவந்துள்ளதாக விடுதலைப் புலிகளின் செய்திக் குறிப்பொன்று தெரிவிக்கின்றது.

இதேவேளை இவ் விசாரணையின் முடிவு எமது மக்களுக்கு நல்ல பாடமாக அமைய வேண்டும் எனவும், இது விடயமாக மக்கள் விழிப்பாக இருக்க வேண்டும எனவும் கேட்டுக் கொண்டுள்ளனர்.

இக் கற்பூர வெடிகுண்டு தொடர்பாக வெளியிடப்பட்ட செய்திக்குறிப்பின் விபரம் வருமாறு:

கற்பூர துண்டுகளின் நடுவே C-4 வெடிமருந்துகளைவைத்து பொதி செய்யப்பட்ட அதி உயர் சக்திவாய்ந்த வெடிகுண்டு ஒன்றை விடுதலைப் புலிகள் கண்டுபிடித்துள்ளார்கள் என கடந்தமாதம் 21ஆம் திகதி அன்று பத்திரிகையின் மூலம் செய்தி வெளியாகி இருந்தமை தெரிந்ததே.

அதுபற்றி விசாரணைகள் தொடர்ந்து நடைபெற்று வருகின்றன. இதுவரை நடந்த விசாரணையில் இருந்து கைதுசெய்யப்பட்டவர்களில் ஒருவரான திரு கந்தையா கோபாலகிருஷ்ணன் (கோபால் தொல்புரம், சுழிபுரம், யாழ்ப்பாணம்) இச் சம்பவங்களில் முழுவிபரமும் தெரியாமல் அதிக இலாபமூட்டும் வியாபாரம் என்ற போர்வையில் உளவாளிகளால் பயன்படுத்தப்பட்ட பொதுமகன் எனத் தெரியவருகின்றது. இவ் வெடிகுண்டின் தன்மையினையும் ஆபத்தினையும் தெரிந்துகொண்டு அப் பொருட்களை வடபகு

[4 ஆம் பக்கம் பார்க்க]



கந்தையா கோபாலகிருஷ்ணன்



இராசரத்தினம் ஜெயரத்தினம்



மாரிமுத்து கந்தசாமி

## வரி விளம்பரம்

### ஸ்ரீ லங்கா அச்சகம்

மக்களின் நல்மதிப்பைப் பெற்ற ஸ்ரீ லங்கா அச்சகம் (புத்தகசாலை யல்ல) தனது சொந்த இடத்திலேயே (ராஜா தியேட்டர் அருகாமை ஸ்ரீகாந்தா அச்சகலேன்) இயங்கிக் கொண்டிருக்கின்ற தென்பதை அன்பான மக்களுக்கு தெரியப்படுத்திக் கொள்கின்றோம். சிந்தியுங்கள்! செயல்படுங்கள்! (4563]

### விதி வழி வாழ்வு

ஜாதகம், கைரேகை, எண் ஜோதிடப்படி பலனறிய. உங்கள் எதிர்கால வாழ்வில் அதிர்ஷ்டசாலியாக வர வேலணை சோதிடர் V.A. சிவராசா 152B அரசடிறோட். கந்தர்மடம் யாழ்ப்பாணம். (4625)

### கொம்பக்ட் டிஸ்க்கில் புதிய பாடல்கள்

அண்மையில் வெளியான புதிய பாடல்கள் COMPACT DISC இல் வெளிவந்துள்ளது மாஸ்ரர் பிரதியாகப் பதிவு செய்ய விரும்பும் ஒலிப்பதிவு நிலையங்கள் - தொடர்பு கொள்ளுங்கள் S. சந்திரமோகன் (மோகன்) ஷண் றெக்கோடிங் ஸ்பொட், நவீன சந்தை, யாழ்நகர். 4082)

### தவறிவிட்டது

28-03-93 அன்று கிளாலிக் கடற்கரையில் உடுப்புகளுடன் கறுப்பு பிரயாணப் பை ஒன்று தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் திருமதி சத்தியதேவி, நீர்வேலி தெற்கு, நீர்வேலி என்ற விலாசத்தில் தொடர்பு கொள்ளவும். சன்மானம் வழங்கப்படும். [4629]

### பாராட்டு வைபவம்


யாழ்ப்பாண இந்துக் கல்லூரியின் லியோ கழகம் அண்மையில் நடத்திய மாவட்ட மட்டத்திலான பொது அறிவுப் போட்டியில் முதல் இரு இடங்களையும் பெற்ற தெல்லிப்பழை யூனியன் கல்லூரி மாணவர்கள் இருவர், மற்றும் யாழ்ப்பாணக் கல்வித் திணைக்களத்தால் நடத்தப்பட்ட சதுரங்கப் போட்டியில் முதலிடம் பெற்ற தெல்லிப்பழை மகாஜனாக் கல்லூரி ஆசிரியர் என். காளிதாஸ் ஆகியோரை பாராட்டிக் கெளரவிக்கும் வைபவம் ஒன்று இன்று திங்கட்கிழமை காலையில் மருதனார்மடத்தில் இயங்கும் தெல்லிப்பழை யூனியன் கல்லூரி மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

### நன்கொடைப்பண படிவம் விநியோகம்

(கொழும்புத்துறை)

உள்ளூராட்சி திணைக்களத்

## நினைவில் மலரும் ஓராண்டு கண்ணீர்த் துளிகள்



### லெப்டினன்ட் ஈழவன்

அரியரத்தினம் பிரதீப்குமார்
(குரும்பசிட்டி)

வீரப்பிறப்பு 04-12-1974
வீரச்சாவு 17-03-1992

திதி- 05-04-1893

ஈழ மண்ணிலே பிறந்தாய்
விடுதலைத்தாகம் கொண்டு திரிந்தாய்
தமிழரின் பாசறை புகுந்தாய்
ஈழவன் என்னும் பெயருடன் திகழ்ந்தாய்
வீர வரிப்புலியாய் எழுந்தாய்
மணலாற்று மண்ணிலே உன் குருதிச் சுவட்டைப் பதித்தாய்

ஆண்டுகள் ஒன்று ஓடி மறைந்தாலும்
எம் இதயத்திலிருந்து என்றும் நீ அழிய மாட்டாய்.

5-4-93 இன்று நடைபெறும் ஓராண்டு சமயக் கிரியைகளில் கலந்து கொள்ளுமாறு உறவினர், நண்பர்கள், சகபோராளிகள் அனைவரையும் அழைக்கிறோம்.

- குடும்பத்தினர்

ஞானவைரவர் கோயிலடி,
கோப்பாய் வீதி,
உரும்பராய்.
(4614)

## 6-ம்மாத நினைவஞ்சலியும் அந்தியேட்டி அழைப்பும்



## சிறுதானியச் செய்கை; வவு. நல்ல விளைச்சல்

வவுனியா மாவட்டத்திலே காலபோக மழையினைப்பயன்படுத்திபயிரிடப்பட்ட உழுந்து, கௌபி, பயறு, நிலக்கடலை ஆகியன அமோக விளைச்சலை தந்துள்ளன.

எதிர்பார்த்த இலக்கினை விட கூடிய நிலப்பரப்பிலே பயிரிடப்பட்டு அதிகளவு விளைவு பெறப்பட்டுள்ளதையும்காணக்கூடியதாகஉள்ளது.

இவ்வருட காலபோகபயிர்ச் செய்கையைத் திட்டமிட்டதிலும் அதனை செயல்படுத்துவதனை இலகுவாக்குவதிலும் தமிழீழ பொருண்மிய மேம்பாட்டுக் கழகம தீவிர கவனம் செலுத்தி வருகின்றது.

## வடக்கு மாணவர் இன்னல்; உலகிற்கு உணர்த்துவேன்

### சர்வ மாணவ சம்மேளன தலைவர்

[கொழும்பு]

வடபகுதி தமிழ் மாணவர்கள் படும் இன்னல்களை சர்வதேச உலகிற்கு உணர்த்துவேன். அதன்மூலம் சிறிலங்கா அரசாங்கத்திற்கு அழுத்தங்களை ஏற்படுத்த எமது சங்கம் பின்னிற்காது என சர்வ மாணவ சம்மேளன தலைவர் சுகத் அழகக்கோன் தெரிவித்தார்.

யாழ். மாணவர்கள் படும் துன்பங்களையும், அவர்கள் வசதிகள் இல்லாமல் தமது கல்வியை தொடர்வதையும் சர்வதேச செஞ்சிலுவை சங்க வீதி மின் விளக்குகளில் கல்வி பயில்வதையும் யாழ் சித்த வைத்தியபீட மாணவ சங்க தலைவர் வர்ண குலேந்திரன் கொழும்பில் விளக்கியதை தொடர்ந்தே அவர்மேற்கொண்டவாறுதெரிவித்தார்.

தென்னிலங்கை மாணவர் போராட்டத்தில் அவர்களுக்கு நாம் ஒத்துழைப்பு நல்கதயார் எமது பிரச்சினைகள் முற்றிலும் வேறுபட்டது. இதை நன்கு உணர வேண்டும். நாம் படும் துன்பங்களைநீங்கள் கற்பனை செய்து கூட பார்க்க முடியாது என்றார் வர்ண குலேந்திரன்.

### சேவை

கெற்பலீ பண்டிதர் குடியிருப்பில் இயங்கும் கமலாசினி வித்தியாலயத்தில் கல்வி கற்கும் மாணவர்களுக்கு சாவகச்சேரி கல்வீக்கோட்டமே சேவையினை மேற்கொண்டு வருகின்றது. [22]

## மானிப்பாய் வடகிழக்கு ஆனந்தன் வைரவர் ஆலயம்

மேற்படி ஆலயத்தின் ஆலய வழிபடுவோர் சங்கத்திற்கும், நிர்வகித்துக் கொண்டிருக்கும் ஆலயநிர்வாகத்திற்கும் இடையே எவ்வித தொடர்புகளும் இல்லை என்பதை இத்தால் சகலருக்கும் அறியத் தருகிறோம்.

- ஆலய தர்மகர்த்தா

(4624)

## பொதுக்கூட்டம்

மாதகல் லூர்துமேரி கிராமிய கடற்றொழில் சமூக அபிவிருத்தி அமைப்பு

18-4-1993 ஞாயிறு காலை 10 மணியளவில் நடைபெறவுள்ளது.

இடம்:- மானிப்பாய் செல்லமுத்து வீதியிலுள்ள

## விக்னா கல்வி நிறுவனம்

52, ஸ்ரான்லி றோட், யாழ்ப்பாணம்.
[கலை, வர்த்தக வகுப்புக்களுக்கு தனித்துவம் வாய்ந்த ஒரே நிறுவனம்]

### 95 கலை, வர்த்தக வகுப்புக்கள்

ஆரம்பம் 10-4-93 10.00 மணி

எமது தனித்துவம் வாய்ந்த ஆசிரியர் குழு

| | | |
|---|---|---|
| பொருளியல் | — | திரு. கலாகரன் |
| வர்த்தகம் | — | திரு. தேவா |
| கணக்கியல் | — | திரு. S. K பிரபாகரன் |
| அளவையியல் | — | திரு. விக்கி |
| தமிழ் | — | திரு. குழந்தை |
| இந்து நாகரிகம் ) இந்து சமயம் ) | — | திரு. காரைசுந்தரம்பிள்ளை |
| புவியியல் | — | திரு. குணராஜா |
| அரசியல் | — | திரு. ஜெயகாந்தன் |
| வரலாறு | — | திரு. சிறிதரன் |

❖ அனுமதிகளை முன்கூட்டியே பெற்றுக் கொள்ளவும்
❖ அனுமதிகள் வரையறுக்கப்பட்டுள்ளதால் முதல் 200 மாணவர்களுக்கு மட்டுமே வழங்கப்படும்.

(சி-6335)

## தொழில் நுட்பக் கல்லூரி இறுதிப் பரீட்சை - 1992

தமிழ் ஆங்கில சுருக்கெழுத்துத் தட்டெழுத்திற்கான மேற்படி இறுதிப் பரீட்சைகள் 1993: 04. 05ஆம் திகதி ஆரம்பமாகின்றன. மேற்படி பயிற்சி நெறிக்கு விண்ணப்பித்தவர்கள் உடனடியாக யாழ்ப்பாணம் தொழில்நுட்பக்கல்லூரிக்கு தங்களுடைய மாணவர் பிரவேச அனுமதிச் சீட்டுடன், தங்களுக்குத் தேவையான தட்டெழுத்து நாடாவினையும் கொண்டு வருமாறு கேட்டுக்கொள்கிறேன்.

- அதிபர்

தொழில்நுட்பக் கல்லூரி,
யாழ்ப்பாணம்.
(சி/6334)

உ

## மண்கும்பான் கிராம அபிவிருத்திச் சங்க விசேட அறிவித்தல்

தீவகத்தில் இருந்து இடம்பெயர்ந்த மக்களின் நலன் கருதி மண்கும்பான் வெள்ளைப்புற்றடி ஸ்ரீவீரகத்திவிநாயகர் ஆலய மகோற்சவ ஆரம்ப தினத்தன்று 1993-04-06ஆந் திகதி செவ்வாய்க்கிழமை காலை 9.30 மணிக்கு விசேட அபிஷேகம் யாழ், மனோகரா தியேட்டருக்கு அருகில் அமைந்துள்ள சாந்தையர்மடம் ஸ்ரீ கற்பக விநாயகர் ஆலயத்தில் நடைபெற இருப்பதால் அடியார்கள் யாவரும் கலந்து அமைதி வேண்டி விநாயகப் பெருமானைப் பிரார்த்திக்கும் வண்ணம்

டத்திலான பொது அறிவுப் போட்டியில் முதல் இரு இடங்களையும் பெற்ற தெல்லிப்பழை யூனியன் கல்லூரி மாணவர்கள் இருவர், மற்றும் யாழ்ப்பாணக் கல்வித் திணைக்களத்தால் நடத்தப்பட்ட சதுரங்கப் போட்டியில் முதலிடம் பெற்ற தெல்லிப்பழை மகாஜனாக் கல்லூரி ஆசிரியர் என். காளிதாஸ் ஆகியோரை பாராட்டிக் கௌரவிக்கும் வைபவம் ஒன்று இன்று திங்கட்கிழமை காலையில் மருதனார்மடத்தில் இயங்கும் தெல்லிப்பழை யூனியன் கல்லூரி மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

### நன்கொடைப்பண படிவம் விநியோகம்

(கொழும்புத்துறை)

உள்ளூராட்சி திணைக்களத்தினால் வழங்கப்படும் அரச நன்கொடைப்பணம் வலி. வடக்கில் வழங்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

வலி வடக்குப் பிரதேச சபை எல்லைக்குட்பட்ட பதிவு செய்யப்பட்ட சகல சனசமூக நிலையங்களுக்கும் நன்கொடைப்பணம் வழங்குவது தொடர்பான படிவங்கள் இப்பகுதிப் பிரதேச சபையால் விநியோகிக்கப்பட்டு வருகின்றன. (24)


## BECON

[பாரதிதாசன்]

ஸ்ரான்லி வீதி,
யாழ்ப்பாணம்.

**93 O/L DAY CLASS**

ஆரம்பம்:
06.04.93 8.00மணி

கணிதம் - சதீஸ்
விஞ்ஞானம் - T.S.S.மோகன்
சமூகக்கல்வி - K.S.முத்துலிங்கம்
தமிழ், சமயம் - கோப்பாய் சிவம்
வர்த்தகம் - ராஜன்
ஆங்கிலம் - பிரபல ஆசிரியர்

★ வாரத்தில் நான்கு நாட்கள் வகுப்புகள் நடைபெறும்.

★ பாடத்திட்டம் முழுமையாகப் பூர்த்தியாக்கப்படும்.

(சி/6332)


உரும்பராய். (4614)

## 6-ம்மாத நினைவஞ்சலியும் அந்தியேட்டி அழைப்பும்



### கப்டன் மதியழகன்

[நடராசா றஜீஸ்குமார்]

தேகவடிவில்: 16-07.1974 — தேசவிடிவில்: 09.11.1992

திதி: ஐப்பசிப் பூரணை (06. 04. 93)

பள்ளிப்படிப்பை பதினாறில் நிறுத்திவிட்டு
குள்ள நரிக்கயவர்படை அழித்திடவே என்று
துள்ளுநடைபோட்டு துடுக்கெனவே நீ நிமிர்ந்து
தெள்ளு தமிழ் மண்காக்கப் புறப்பட்டாய் அன்று
கிளி செங்களம் ஆடியே மாவீரனானாய் இன்று
மாதமோ ஆறானாலும் ஆறவில்லை எம் துயரம்.

மாவீரன் கப்டன் மதியழகன் (நடராசா றஜீஸ்குமார்) அவர்களது அந்தியேட்டிக் கிரியைகள் நாளை 06. 04. 93 செவ்வாய்க்கிழமை அதிகாலை 3. 00 மணிக்குஆரம்பமாகி நடைபெறும். அதனைத்தொடர்ந்து மதியம் நடைபெற இருக்கும் சபிண்டீகரணக் கிரியைகளிலும் மதிய போசனத்திலும் கலந்து கொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்கள், சகபோராளிகள், மாவீரர் குடும்பத்தினர் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

புதுக்கலட்டி.
அல்வாய் கிழக்கு,
அல்வாய்
05. 04. 93

- குடும்பத்தினர்

(4616)

புகளும் இல்லை என்பதை இத்தால் சகலருக்கும் அறியத் தருகிறோம்.

- ஆலய தர்மகர்த்தா

(4624)

## பொதுக்கூட்டம்

மாதகல் லூர்துமேரி கிராமிய கடற்றொழில் சமூக அபிவிருத்தி அமைப்பு

18-4-1993 ஞாயிறு காலை 10 மணியளவில் நடைபெறவுள்ளது.

இடம்:- மானிப்பாய் செல்லமுத்து வீதியிலுள்ள கடற்புலிகளின் காரியாலயம்.

சகல அங்கத்தவர்களும் தவறாது சமுகம் தரும்படி கேட்டுக்கொள்கிறோம்.

(4623) —செயலாளர்

உ
சிவமயம்

நெல்லியடி தடங்கன் புளியடி முருகமூர்த்தி ஆலய

## மணவாளக் கோல விழா

5-4-1993 திங்கட்கிழமை (இன்று)

காலை 7-00 மணி - ஸ்ரீவள்ளி தேவசேனா சமேத ஸ்ரீ சிவசுப்பிரமணியப் பெருமானுக்கு
1008 சங்காபிஷேகமும்
ஐந்து பரிவார மூர்த்திகளுக்கும்
ஸ்நபன அபிஷேகமும்
தொடர்ந்து
மேளக்கச்சேரியும் இடம்பெறும்.

மேளக்கச்சேரி வழங்குவோர்:
தேவஸ்தான வித்துவான் ஜீவரத்தினம் குழுவினர்
நாதஸ்வர மேதை ஜெகநாதன் குழுவினர்

ஆனந்தக் காவடி: காலை 6-30 மணியளவில் ஆனந்தக் காவடி நவிண்டில் குலனையம்பதி விநாயகர் ஆலயத்திலிருந்து ஆரம்பமாகும்.

மாலை நிகழ்ச்சிகள்:
5.00 மணி — விசேட பூசை
6.00 மணி — திருவீதியுலா - பூந்தண்டிகையில்

இரவு நிகழ்ச்சிகள்;
8.00 மணி — மேளக்கச்சேரி
9.00 மணி — தவில்மேதை திரு ச. முருகையா அவர்களுக்கு பொன்னாடை போர்த்திப் பட்டமளிக்கும் வைபவம் நெல்லியடி சனசமூக நிலைய இளைஞர்களின் ஆதரவில் நடைபெறும்.
9.30 மணி இன்னிசை வேந்தர் திரு. பொன். சுந்தரலிங்கம் அவர்கள் வழங்கும் தெய்வீக இசை அரங்கு

அடியார்கள் அனைவரையும் வருக வருகவென அன்புடன் அழைக்கின்றோம்.

(4622) - ஆலய பரிபாலன சபையினர்

## கிராம அபிவிருத்திச் சங்க விசேட அறிவித்தல்

தீவகத்தில் இருந்து இடம்பெயர்ந்த மக்களின் நலன் கருதி மண்கும்பான் வெள்ளைப்புற்றடி ஸ்ரீவீரகத்திவிநாயகர் ஆலய மகோற்சவ ஆரம்ப தினத்தன்று 1993-04-06ஆந் திகதி செவ்வாய்க்கிழமை காலை 9.30 மணிக்கு விசேட அபிஷேகம் யாழ், மனோகரா தியேட்டருக்கு அருகில் அமைந்துள்ள சாந்தையர்மடம் ஸ்ரீ கற்பக விநாயகர் ஆலயத்தில் நடைபெற இருப்பதால் அடியார்கள் யாவரும் கலந்து அமைதி வேண்டி விநாயகப் பெருமானைப் பிரார்த்திக்கும் வண்ணம் கேட்டுக் கொள்கின்றோம்.

செயலாளர்
கிராம அபிவிருத்திச் சங்கம்,
மண்கும்பான்.

(4626)

## நினைவு கூருகின்றோம்...

## 1993-04-05

1986ஆம் ஆண்டு இதே தினத்தில் மட்டு-தாண்டியடிப்பகுதியில சிறிலங்கா சிறப்பு அதிரடிப்படையினருடனான சமரில் வீரச்சாவெய்திய-
லெப். புவிராஜ் (ரா. உதயராஜன் - கல்லடி-மட்டு.)

1987ஆம் ஆண்டு மட்டு - கள்ளிச்சை வடமுனைப் பகுதியில் சிறிலங்காப் படையினருடனான சமரில் வீரச்சாவெய்திய-
லெப். தேவன் (புத்திரசிகாமணி சூரியகுமார்- ஏறாவூர் - மட்டு)

1988ஆம் ஆண்டு இந்தியப்படையினரால் சுட்டுக் கொல்லப்பட்ட யாழ் இந்துக்கல்லூரி உயர்வகுப்பு மாணவனாகிய சுதுமலை வாசி.

1989ஆம் ஆண்டு மன்னாரில் தேசவிரோத சக்திகளினால் சுட்டுக் கொல்லப்பட்ட தமிழ்ப் பொதுமகன்.

1991ஆம் ஆண்டு அம்பாறை ஆலடி வீதியில் சிறிலங்காஇராணுவத்தினருடனான சமரில் வீரச்சாவெய்திய-
ஈஸ்வரன்

மட்டு - வாகரை 32-ம்கட்டைப் பகுதியில் சிறிலங்கா இராணுவத்தினருடனான சமரில் வீரச்சாவெய்திய-
கப்டன் குமார் (இளையதம்பி மோகனகுமார் - சந்திவெளி - மட்டு.)
லெப். மனோ (........., முருகவெட்டை - மட்டு.)
2-ம் லெப். கமலேஸ் [ - மன்னம்பிட்டி]
எட்வேட் [ - மயிலவெட்டுவான் - மட்டு.]

ஆகியோரை இந்நாளில்
நினைவு கூருகின்றோம்.

**தமிழீழ விடுதலைப்புலிகள்**

(சி-63 31)

சிந்தனைக்கு

அதிசயமான வலையே சட்டம்
அதில் பெரிய மீன்கள் தப்பிவிடும்.

— ஜேம்ஸ் ஜெ. ரோஷ்

ஈழநாதம்

31, மகேந்திரா வீதி, யாழ்ப்பாணம் 05-04-1993
தொலைபேசி
ஆசிரியபீடம் 025-2839 நிர்வாகபீடம் 2023
த. பெ. எண்-05

# 87 ஆயிரம் பேருக்கு 3 மாதங்களில் சிகிச்சை

(யாழ்ப்பாணம்)

யாழ். போதனா வைத்திய சாலை வெளி நோயாளர் பிரிவில் கடந்த மூன்று மாதங்களில் 73,348 பேர் சிகிச்சை பெற்றுள்ளனர். அதேவேளை 14,819 பேர் வைத்தியசாலையில் தங்கி சிகிச்சை பெற்றுள்ளார்களென வைத்தியசாலை பதிவேட்டிலிருந்து தெரியவருகின்றது.

இதுபற்றி மேலும் தெரிய வருவதாவது: கடந்த ஜனவரி மாதம் வெளிநோயாளர் பிரிவில் 23,900 பேர் சிகிச்சை பெற்றுள்ளனர். 4,981 பேர் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்றுள்ளார்கள். இதேபோன்று பெப்ரவரிமாதம் வெளிநோயாளர் பிரிவில் 23,048 பேரும், தங்கி சிகிச்சை பெற்றோர் 4,646பேரும், மார்ச்மாதம் 26,400பேர் வெளி நோயாளர் பிரிவிலும் 5,192 பேர்தங்கியும் சிகிச்சை பெற்றனர். இம்மூன்று மாதங்களிலும் மார்ச்மாதமே கூடுதலான நோயாளர்கள்சிகிச்சை பெற்றுள்ளார்கள். இவர்களில் அநேகமானோர் மலேரியா, தைபோயிட், வயிற்றோட்டம் போன்றவற்றுக்காக சிகிச்சை பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது. (சி)

## விசாரணைக்கு எதிரான அரசாங்கத்தின் சதி

மயிலந்தனையில் கடந்த வருடம் ஆகஸ்ட் மாதம் 35 தமிழ் மக்கள் படுகொலை செய்யப்பட்டதான வழக்கு விசாரணையை பொலநறுவ மாவட்ட நீதிமன்றத்திற்கு மாற்றப்பட்டுள்ளதாக மட்டக்களப்பு மாவட்ட நீதிபதி கடந்த வெள்ளிக்கிழமை நீதிமன்றத்தில் அறிவித்துள்ளார்.

இவ்வழக்கு மட்டக்களப்பில் இருந்து, பொலநறுவை நீதிமன்றத்திற்கு மாற்றம் செய்யப்பட்டுள்ளமையானது, எந்தவிதத்திலும் நியாயப்படுத்தப்படமுடியாது என்பதோடு, இவ்வழக்கை தோற்கடிப்பதற்காக அரசாங்கம் மேற்கொண்டுள்ள ஒரு சதி நடவடிக்கை என்றும் கூறலாம்.

இவ்வழக்கில் 23 இராணுவத்தினர் குற்றவாளிகள் என விசாரணையில் இருந்து கண்டறியப்பட்ட பின்னரே மாவட்ட நீதிமன்றத்தில் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டது. இவ்வழக்கில் எதிரிகள் யாவரும் சிங்கள இராணுவத்தினர். பிரதிவாதிகள் யாவரும் அப்பாவித் தமிழ்ப் பொது மக்கள் ஆகும்.

இந்நிலையில், மட்டக்களப்பு மாவட்டத்தில் இருந்து வழக்கை பொலநறுவை மாவட்டத்திற்கு மாற்றுவதென்பது பிரதிவாதிகளை அச்சுறுத்தும் ஒரு வகை நடவடிக்கையே ஆகும். மயிலந்தனையில் இடம்பெற்ற படுகொலைகள் தொடர்பாக ஏற்கனவே அச்சத்தின் காரணமாக சாட்சியளிக்க பலர் முன்வரவில்லை. பலர் இதுபற்றிப் பேசவே அஞ்சுகின்றனர். இதற்கு சிங்கள இராணுவத்தினரால் பழிவாங்கப்படுவோம் என்ற அச்சமே காரணமாகும்.

இவ்வாறான மக்களுக்கு அச்சம் ஏற்படுவதிலும் நியாயங்கள் உண்டு. கடந்த காலத்தில் இராணுவத்தினருக்கு எதிராக சாட்சியமளிக்க முற்பட்டவர்கள் பலர் படுகொலை செய்யப்பட்டுமுள்ளனர். கிழக்கில் நடந்த படுகொலை ஒன்று குறித்து சாட்சியமளிக்கவென தகவல் திரட்டிய கிராமசேவகர் ஒருவர் இராணுவத்தால் படுகொலை செய்யப்பட்டமை சகலரும் அறிந்ததே.

இதேவேளை மயிலந்தனை படுகொலையை இராணுவத்தினரே மேற்கொண்டனர் என்ற விசாரணை முடிவை அரசாங்கம் விரும்பி வெளியிட்டதொன்று அல்ல. கடந்த காலப் படுகொலைகளை மூடி மறைக்க முற்பட்டது போலவே இப்படுகொலையையும் மூடிமறைக்கவே அரசாங்கம் விரும்பியது. ஆனால், அது மூடி மறைக்க முடியாமல் சாட்சியங்களுடன் நிருபிக்கப்பட்டதினாலும், சர்வதேசத்தின் அழுத்தத்தின் காரணமுமாகவே

## வேட்பாளர் தெரிவின்போது இழுபறி எதுவும் இல்லை

### அமைச்சர் தொண்டமான் அறிவிப்பு

கடந்த ஐம்பத்து மூன்று வருடங்களாக எமக்கு இருக்கும், அனுபவத்தைப் பயன்படுத்தி வேட்பாளர்கள்தெரிவு செய்யப்பட்டுள்ளனர் என்று அமைச்சர் தொண்டமான் செய்தியாளர்களிடம் பேசுகையில் தெரிவித்தார். அவர் மேலும் கூறுகையில். வேட்பாளர் தெரிவு செய்வதில் இழுபறி எதுவும் ஏற்படவில்லை என்றும் தெரிவித்தார்.

## இ. தொ. கா. கொழும்பிலும் போட்டியிடும் - தொண்டா

(கொழும்பு)

இலங்கைத் தொழிலாளர் காங்கிரசும், ஐக்கிய தேசியக் கட்சியும்வரும் மாகாணசபைத் தேர்தலில் யானைச் சின்னத்தில் போட்டியிட இணங்கியுள்ளன என்று அமைச்சர் தொண்டமான் கூறினார்.

இலங்கைத் தொழிலாளர் காங்கிரசுக்கு போதிய இடங்கள் ஒதுக்கப்படாத மாவட்டங்களில் அது தனித்துப் போட்டியிடும் என்றும் அவர் தெரிவித்தார்.

இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ், கொழும்பு, கம்பஹா, களுத்துறை, கண்டி, நுவரெலியா, மாத்தளை, பதுளை, மொனறாகலை, இரத்தினபுரி, கேகாலை ஆகிய மாவட்டங்களில்போட்டியிடும் என்று அதே வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

### ஒரே குடும்பத்தைச் சேர்ந்தவர்களான

## லீவில்சென்றராணுவத்தினர் தற்கொலை செய்ய முயற்சி

### ஒருவர் பலி; மற்றவருக்கு ஆபத்து

(கொழும்பு)

ஒரே குடும்பத்தை சேர்ந்த இராணுவ சிப்பாய் இருவர் லீவில் வீடு வந்தபோது தற்கொலை செய்ய முயன்றனர். ஒருவர் மரணம் அடைந்துள்ளார். மற்றவர் ஆபத்தான நிலையில் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

தனது தலையில் வைத்து கிரனேட் ஒன்றை வெடிக்கச் செய்துஇராணுவத்தினரில் ஒருவர் தற்கொலைசெய்துகொண்டார்.

ஹிங்குரா கொடையைச் சேர்ந்த மேற்படி இராணுவத்தினர் லீவில் வீட்டிற்கு வந்தபோது இச் சம்பவம்நடைபெற்றது

இவரின் சகோதரரான இன்னும் ஒரு இராணுவத்தினர் கிருமிநாசினி அருந்தி தற்கொலை செய்ய முயன்று ஆபத்தான நிலையில் ஹிங்குரா கொடை ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

## மூன்று குழுக்களாக சுதந்திரக்கட்சி பிரிவாம்!

(கொழும்பு)

மாகாணசபைத் தேர்தல்கள் நெருங்கி வரும் இவ்வேளையில் சிறிலங்கா சுதந்திரக்கட்சி உட்பூசல் காரணமாக மூன்று குழுக்களாக பிரிந்து செயற்பட்டுவருவதாக அரச சார்பு பத்திரிகை செய்தி வெளியிட்டுள்ளது.

சிறிமாவோ பண்டாரநாயக்கா, சந்திரிகா குமாரணதுங்க ஆகியோரின் தலைமையில் ஒரு குழுவும், அநுரா பண்டாரநாயக்கா, தினேஷ் குணவர்த்தனா தலைமையில் ஒரு குழுவும், கட்சியின் சின்னம், நிறம் என்பவற்றை இழந்த பழைய கட்சி குழுவினர் ஒரு பிரிவாகவும் செயற்பட்டு வருவதாக அப்பத்திரிகை செய்தி வெளியிட்டுள்ளது.

வவுனியா

## இரத்த வங்கியில் இரத்தம் சேமிக்கமுடியாநிலை

(வவுனியா)

வவுனியா ஆதார வைத்திய சாலையில் இரத்தவங்கி

படுகின்றது. வவுனியா இரத்த வங்கிக்கு அடிக்கடி ஏற்படும்

## மானுடம் வென்றது

வீரம் விளையாடும்
வித்தகர் பூமியிது
காரம் நிறைந்த திருக்
காரிகைய ருண்டென்று
பாரத நாட்டிற்கோர்
பாடம் புகட்டியே
ஊரதிர உரமானாள்
அன்னை பூபதித்தாய்.

எண்ணிய கருமத்தில்
ஊனை ஊருக்கியவள்
மண்ணுக்காய் தன்னுயிரை
மனமுவந்து ஈகை செய்தாள்
கண்தந்து தமிழீழக்
காவியத் தாயானாள்

மானிடரை வதை செய்யும்
மலட்டுக் கொள்கையர்க்கு
ஆணி அறைந்து விட்ட
அன்னை பூபதியோ
வீணர் மூட்டிவிட்ட
விறகில்லாத் தீயணைந்து
தானெடுத்த கொள்கைவழி
தமிழீழச் சுடரானாள்.

கானம் இசைத்தகுயில்
களமமர்ந்து இருக்கையிலே
ஈனர் தொடுத்த கணை
இற கொடித்து நிலம்வீழ்த்த
வானம் அதிர்ந்தது
வையகம் நிமிர்ந்தது
மானச் சுடரேந்தி
மானுடம் வென்றது.

-மூருகு இரத்தினம்

## கும்புறுமூலை தடைமுகாம் நேரக் கெடுபிடி

(மட்டக்களப்பு)

வாழைச்சேனையிலிருந்து மட்டக்களப்பு, ஏறாவூர், கல்முனை ஆகிய இடங்களுக்குச் செல்லும் வாகனங்களும் பிரயாணிகளும் தினமும் காலை 10-30 மணிக்குப் பின்னரே கும்புறுமூலை இராணுவ ப்ரிசோதனை நிலையத்திலிருந்து புறப்பட அனுமதி வழங்கப்படுகின்றது.

இதனால் அவசர அத்தியாவசிய தேவைகளின் நிமித்தம் மட்டக்களப்பு செல்வோர் நண்பகல் 12 மணிக்கு பின்பே மட்டக்களப்பை சென்றடையக் கூடியதாக இருக்கின்றது

### கடிகாரம் கண்டெடுப்பு

கொக்குவில் நந்தாவில் அம்மன் கோயிலடியில் கண்டெடுக்கப்பட்ட ஆண்கள் அணியும் கடிகாரம் ஒன்று எமது காரியாலயத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளது. உரியவர்கள் வந்து ஆதாரம் காட்டிப்பெற்றுக் கொள்ளவும்.

### காங்கிரஸ் சந்திப்பைத் தொடர்ந்து

## அ.தி.மு.க., தி.மு.க. குழுவினர்

பலர் இதுபற்றிப் பேசவே அஞ்சுகின்றனர்! இதற்கு சிங்கள இராணுவத்தின ரால் பழிவாங்கப்படுவோம் என்ற அச்சமே காரண மாகும்.

இவ்வாறான மக்களுக்கு அச்சம் ஏற்படுவதி லும் நியாயங்கள் உண்டு. கடந்த காலத்தில் இராணுவத்தினருக்கு எதிராக சாட்சியமளிக்க முற் பட்டவர்கள் பலர் படுகொலை செய்யப்பட்டு முள்ளனர். கிழக்கில் நடந்த படுகொலை ஒன்று குறித்து சாட்சியமளிக்கவென தகவல் திரட் டிய கிராமசேவகர் ஒருவர் இராணுவத்தால் படு கொலை செய்யப்பட்டமை சகலரும் அறிந்ததே.

இதேவேளை மயிலந்தனை படுகொலையை இராணுவத்தினரே மேற்கொண்டனர் என்ற விசா ரணை முடிவை அரசாங்கம் விரும்பி வெளியிட்ட தொன்று அல்ல. கடந்த காலப் படுகொலைகளை மூடி மறைக்க முற்பட்டது போலவே இப்படு கொலையையும் மூடிமறைக்கவே அரசாங்கம் விரும்பியது. ஆனால், அது மூடி மறைக்க முடியா மல் சாட்சியங்களுடன் நிரூபிக்கப்பட்டதினாலும், சர்வதேசத்தின் அழுத்தத்தின் காரணமுமாகவே அரசாங்கம் இதனை வெளியிட்டது.

இந்நிலையில், தற்பொழுது படுகொலை புரிந்த இராணுவத்தினரைப் பாதுகாக்கும் முகமாகவே பொலநறுவைக்கு விசாரணையை மாற்றம் செய் துள்ளது. இதன்மூலம் சாட்சியங்களை நீதிமன் றத்திற்குச் செல்லவிடாமல் தடுத்துவிடலாம் என அரசாங்கம் எண்ணுகின்றது.

சிறிலங்கா அரசாங்கத்தின் இந்நடவடிக்கை யானது உலகத்தின் கண்ணில் மண்ணைத்தூவும் நடவடிக்கைக்கு ஒப்பானதாகும். அண்மைக் காலத்தில் சிறிலங்கா அரசாங்கம் புரியும் இனப் படுகொலைகளை நிறுத்துமாறும், புரிந்த படு கொலைகள் தொடர்பாக விசாரணை நடத்து மாறும் நிர்ப்பந்தங்கள் அதிகரித்துள்ளன. இவை சிறிலங்கா அரசாங்கத்திற்கு உலக நாடுகள், உலக நிதி நிறுவனங்கள் வழங்கும் நிதி உதவி களுடன் ஓரளவிற்கு தொடர்பு படுத்தப் பட்டு வருகின்றமையால், இவை குறித்து முற்றாக சிறி லங்கா அரசாங்கத்தால் புறந்தள்ளிவிட முடியாத நிலை உள்ளது. இந்நிலையில், விசாரணைகள் நடத்தப்படும்போது, தமதுஏவலினால் படுகொலை கள் புரிந்த இராணுவத்தினரை முற்றாக அரசாங் கத்தால் பாதுகாக்க முடியாத நிலை உருவாகி விடுகின்றது.

இவ்வாறானதொரு நிலைதான் தற்பொழுது மயிலந்தனைப் படுகொலை புரிந்த இராணுவத் தினர் குறித்தும் ஏற்பட்டுள்ளது. இதில் இரா ணுவத்தினருக்கு தண்டனை ஏதும் கிடைக்கு மானால். இது சிங்கள இராணுவத்தினரை அர சிற்கு எதிராக திருப்பி விடக்கூடிய ஒன்றாக அமைந்துவிடும். இந்நிலையிலேயே அரசாங்கம் பொலநறுவைக்கு நீதிமன்றத்தை மாற்றுவதன் மூலம் பிரதிவாதிகளுக்கு அச்சுறுத்தலை ஏற் படுத்தி, மிரட்டி அவர்களை வழக்கில் இருந்து ஒதுங்கவைத்து இராணுவத்தைப் பாதுகாக்க முற் படுகின்றது.

அதாவது, உலகிற்கு நீதி விசாரணையை அரசு மேற்கொண்டதாகக் காட்டிக் கொள்ளும் அதேவேளை, இராணுவத்தினருக்கு தண்டனை ஏதும் கிடைக்காமல் பார்த்துக் கொள்வதில் அர சாங்கம் தீவிர அக்கறை செலுத்துகின்றது. இவ் வாறான அரசாங்கத்தின் இச் சதி நாடகத்தை உலகம் புரிந்து கொள்ளவேண்டும். அவை வழக்கை மீண்டும் மட்டக்களப்பிலேயே நடத்த அரசை நிர்ப்பந்திக்கவேண்டும்.

## மூன்று குழுக்களாக சுதந்திரக்கட்சி பிரிவாம்!

(கொழும்பு)

மாகாணசபைத் தேர்தல்கள் நெருங்கி வரும் இவ் வேளையில் சிறிலங்கா சுதந் திரக்கட்சி உட்பூசல் காரண மாக மூன்று குழுக்களாக பிரிந்து செயற்பட்டுவருவதாக அரச சார்பு பத்திரிகை செய்தி வெளியிட்டுள்ளது.

சிறிமாவோ பண்டார நாயக்கா, சந்திரிகா குமாரண துங்க ஆகியோரின் தலைமை யில் ஒரு குழுவும், அனுரா பண்டாரநாயக்கா, தினேஷ் குணவர்த்தனா தலைமையில் ஒரு குழுவும், கட்சியின் சின் னம், நிறம் என்பவற்றை இழந்த பழைய கட்சி குழு வினர் ஒரு பிரிவாகவும் செயற் பட்டு வருவதாக அப்பத்தி ரிகை செய்தி வெளியிட்டுள் ளது.

வவுனியா

## இரத்த வங்கியில் இரத்தம் சேமிக்கமுடியாநிலை

(வவுனியா)

வவுனியா ஆதார வைத்திய சாலையில் இரத்த வங்கி உள்ளபோதிலும் இங்கு இரத் தத்தை சேமித்து வைக்க முடி யாத நிலை காணப்படுகின் றது.

இங்கு சேகரிக்கப்படும் இரத் தம் அநுராதபுரம் வைத்திய சாலைக்கே அனுப்பிவைக்கப் படுகின்றது. வவுனியா இரத்த வங்கிக்கு அடிக்கடி ஏற்படும் மின்வெட்டும் ஜெனரேட்டரி லிருந்து இதுவரை இக்கட்ட டத்திற்கு மின் இணைப்பு வழங்கப்படாமையும் இங்கு இரத்தத்தை பழுதடையாது சேமித்து வைக்க முடியாத நிலையை ஏற்படுத்தியுள்ள தாக தெரிவிக்கப்படுகின்றது.

## எம். எம். 9 ரக துப்பாக்கி தெஹிவளையில் மீட்பு

(கொழும்பு)

தெஹிவளையில் போதைப் பொருள் விற்பனை நிலையம் ஒன்றை முற்றுகையிட்ட பொலிசார் அங்கிருந்து சீனத் தயாரிப்பான இரண்டு நவீன எம். எம். 9 ரக கைத்துப்பா க்கிகளையும், 13 ரவைகளை யும் கைப்பற்றினர். அங்கிரு ந்த நால்வர் கைது செய்யப் பட்டனர்.

சீனத் தயாரிப்பான இந்த புதிய கைத்துப்பாக்கிகள் இவ ர்களுக்கு எப்படி கிடைத்தன என்பது குறித்து தீவிர விசா ரணையை பொலிசார் மேற் கொண்டுள்ளனர்.

### உதைபந்தாட்டம்

நாவாந்துறை சென்மேரிஸ் விளையாட்டுக்கழகம் நடாத் தும் உதைபந்தாட்ட போட் டிகளில் இன்று திங்கள் நாவாந்துறை கலைவாணி மைதானத்தில் பிற்பகல் 3.30க்கு சென்லூட்ஸ் ஏ அணி எதிர் பாரதி விளையாட்டுக் கழகம் மோதுகின்றது. பிற் பகல் 4 30 மணிக்கு சென் மேரிஸ் எதிர் யாழ். பல் கலைக்கழக அணி மோதும்.

### கண்காட்சி

யாழ் மாவட்டத்தில் மாபெ ரும் கைத்தொழில், விவசாய விஞ்ஞான கண்காட்சி 16ஆம், 17ஆம் திகதிகளில் இலங்கைச் செஞ்சிலுவைச் சங்கத்தின் உடுவில் கிளை பிரிவினரால் நடாத்தப்படவுள்ளது.

யாழ்ப்பாணத்தில் 1986ஆம் ஆண்டுக்கு பின்னர் பாரியள வில் யாழ்மாவட்டத்தின் சகல வளங்களையும் பிரதிபலிக்கத் தக்கவகையில்.மருதனார்மடம் இராமநாதன் கல்லூரியில் இது இடம்பெறவுள்ளது. [05]

### விளையாட்டுப்போட்டி

புலோலி கொத்தணிப் பாட சாலைகளுக்கிடையேயான வருடாந்த விளையாட்டுப் போட்டி புற்றளை மகாவித்தி யாலய மைதானத்தில் புலோலி கொத்தணி அதிபர் திருமதி லோ. குமாரசாமி தலைமையில் நாளை நடை பெறுகின்றது. (25)

### 10-ம் ஆண்டு நிறைவு

சர்வதேச பரியோவான் முதலுதவிச் சங்கமும் படைப் பிரிவும் இணைந்து தனது பத் தாவது ஆண்டு நிறைவுவிழா வை 10-ம்திகதி சனிக்கிழமை யாழ் மத்திய கல்லூரி மண்ட பத்தில் கொண்டாடுகின்றது.

### தையல் பயிற்சி

பளை வேம்படுகேணி சிவா அறிவகத்தில் அப்பகுதியில் உள்ள யுவதிகளுக்கானதையல் பயிற்சி வகுப்பு ஒன்று இன்று 9 மணிக்கு இலங்கை செஞ் சிலுவை சங்கத்தின் பளை கிளைத் தலைவரால் வைபவ ரீதியாக திறந்து வைக்கப்பட வுள்ளது. (86)

செய்துஇராணுவத்தினரில் ஒரு வர் தற்கொலைசெய்துகொண் டார்.

ஹிங்குரா கொடையைச் சேர்ந்த மேற்படி இராணுவத் தினர் லீவில் வீட்டிற்கு வந்த போது இச் சம்பவம்நடை பெற்றது

இவரின் சகோதரரான இன் னும் ஒரு இராணுவத்தினர் கிருமிநாசினி அருந்தி தற் கொலை செய்ய முயன்று ஆபத்தான நிலையில் ஹிங் குரா கொடை ஆஸ்பத்திரி யில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

(மட்டக்களப்பு)

வாழைச்சேனையிலிருந்து மட்டக்களப்பு, ஏறாவூர், கல் முனை ஆகிய இடங்களுக்குச் செல்லும் வாகனங்களும் பிர யாணிகளும் தினமும் காலை 10-30 மணிக்குப் பின்னரே கும்புறுமூலை இராணுவ பரி சோதனை நிலையத்திலிருந்து புறப்பட அனுமதி வழங்கப் படுகின்றது.

இதனால் அவசர அத்தியா வசிய தேவைகளின் நிமித்தம் மட்டக்களப்பு செல்வோர் நண்பகல் 12 மணிக்கு பின்பே மட்டக்களப்பை சென்றடை யக் கூடியதாக இருக்கின்றது

### கடிகாரம் கண்டெடுப்பு

கொக்குவில் நந்தாவில் அம் மன் கோயிலடியில் கண்டெ டுக்கப்பட்ட ஆண்கள் அணி யும் கடிகாரம் ஒன்று எமது காரியாலயத்தில் ஒப்படைக் கப்பட்டுள்ளது. உரியவர்கள் வந்து ஆதாரம் காட்டிப்பெற் றுக் கொள்ளவும்.

காங்கிரஸ் சந்திப்பைத் தொடர்ந்து

# அ.தி.மு.க., தி.மு.க. குழுவினர் ஆளுநருடன் தனித்துபேச்சு

(சென்னை)

தமிழக ஆளுநர் பீஷ்மன் நாராயண்சிங்கை நேற்று முன் தினம் மாலை அண்ணா திரா விட முன்னேற்ற கழகத்தின ரும், திராவிட முன்னேற்ற கழகத்தினரும் தனித்தனியே சந்தித்து தமிழக சட்டப் பேரவையின் தற்போதைய நிலை குறித்து தத்தமது முறை யீடுகளை தெரிவித்துக் கொண் டனர்.

அ. தி. மு. க. சார்பில் அமைச்சர் நெடுஞ்செழியன் தலைமையில் துணைசபாநா யகர் உட்பட பத்திற்கு மேற் பட்ட எம். எல். ஏக்கள் ஆளு நரைச் சந்தித்தனர். இவர்க ளின் சந்திப்பு சுமார் ஒரு மணி நேரம் நீடித்தது. இச் சந்திப் பின் பின் செய்தியாளர்களி டையே பேசிய அமைச்சர் நெடுஞ்செழியன், ஏதாவது ஒரு காரணத்தைக் கூறி காங் கிரஸ் கட்சியினர் சபையை விட்டு வெளியேறுவதால் சபை நடவடிக்கை பாதிக்கப்படுவது குறித்து தாம் ஆளுநரிடம் விளக்கியதாகக் கூறினார். சில தினங்களுக்கு முன் காங்கிரஸ் கட்சியினர் ஆளுநரை சந்தித்து தமது நிலையை விளக்கியதை அடுத்தே அ. தி. மு. கவும் தனது நிலையை ஆளுநருக்கு விளக்கியதாகநெடுஞ்செழியன் மேலும் தெரிவித்தார்.

தி. மு. க. சார்பில் பரிதி இளம் வழுதி உட்பட முன் னாள் உறுப்பினர்கள் சிலர் ஆளுநரை சந்தித்து தனியா கப் பேசினர். பேரவையின் கௌரவத்தைக் காக்குமாறு ஆளுநர் பேரவைக்கு செய்தி அனுப்ப வேண்டும் என்றும், பேரவையில் ஆளும் கட்சியின் முரட்டுத்தனமும் வன்முறை யுமே நிகழ்கின்றது என்றும் தி. மு. க. குழுவினர் ஆளுந ருக்கு விளக்கினர். சட்டப் பேரவையின் கௌரவத்தைக் காக்க ஆளுநர் தமது அதிகா ரச் சட்டத்தை பயன்படுத்த வேண்டும் என்றும் தி. மு. க. குழுவினர் கோரிக்கை விடுத் தனர்.

அண்மையில் இவ்வாறு காங் கிரஸ் கட்சியினரும் தமிழக ஆளுநரை தனியாக சந்தித்து ஆளும் கட்சிக்கு எதிரான தமது கருத்துகளை வெளியிட் டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

## எகிப்தில் பிரமிட் அருகே குண்டுவெடிப்பு

கெய்ரோவில் உள்ள உலகப் புகழ்பெற்ற பிரமிட்டுகளில் ஒன்றின் மீது நடத்தப்பட்ட குண்டு வெடிப்பு தாக்குதல் ஒன்றையடுத்து வெளிநாட்டு உல்லாசப் பயணிகளையும், வர்த்தகர்களையும் உடனடி யாக நாட்டை விட்டு வெளி யேறுமாறுமுஸ்லிம்அடிப்படை வாதிகள் எச்சரித்துள்ளனர்.

செப்பரன் என்ற இடத்தி லுள்ள இந்த பிரமிட் மீது நடத்தப்பட்ட குண்டுத் தாக் குதலில் இருவர் காயமடைந் தனர். குண்டுவெடித்த போது அங்கு ரஷ்ய உல்லாசப் பயணி கள் குழு ஒன்று இருந்தது. இச்சம்பவம் தொடர்பாக 35 பேர் எகிப்திய பொலிசாரால் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

4,500 ஆண்டுகள் பழைமை யான இந்த பிரமிட் உல்லாசப் பயணிகளைக் கவரும் இடமாக இருந்து வருகிறது.

## உச்ச நீதிமன்ற தீர்ப்பிற்கு அத்வானி வரவேற்பு

மத்திய பிரதேச அரசை மத் திய அரசு கலைத்தமை சட் டப்படி செல்லுபடியற்றது என்று மத்திய பிரதேச உச்ச நீதிமன்றம் தீர்ப்பு அளித்து இருப்பதை பாரதீய ஜனதாக் கட்சியின் தலைவர் எல். கே. அத்வானி வரவேற்றுள்ளார்.

இதே வேளை குடியரசுத் தலைவரின் உத்தரவிற்கு எதி ராக நீதிமன்றத் தீர்ப்பு அமைந்திருப்பதால்தீவிரமான அரசியல் சாசன விளைவுகள் ஏற்படலாம் என்று அச்சம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

தனது வரம்புகளை மீறிச் செயல்படும் போக்கு நீதித்து றையிடம் காணப்படுவதாக இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் சத்துரானந்த் மிஸ்ரா கூறி யுள்ளார்.

அரசியல் சாசனத்தின் 356 ஆவதுபிரிவு எப்போதுமே அர சியல் நோக்கங்களுக்காக பயன் படுத்தப்படுகின்றது என்ப தால் அப்பிரிவை நீக்கி விடு வதே சிறந்தது என்று தெலு ங்கு தேசக் கட்சித் தலைவர் என். டி. ராமராவ் கூறியுள் ளார்.

ஈழநாதம்

# பாக். உடன் ஆயுத பேரம்; அமெரிக்கா தடைவிதிப்பு

(வாஷிங்டன்)

பாகிஸ்தானுக்கு ஆயுதங்கள் விற்பனை செய்யும் எல்லா ஐரோப்பிய பேரங்களுக்கும் அமெரிக்கா உடனடியாக தடை விதிக்கப்பட்டிருப்பதாக தெரியவருகிறது.

இதுபற்றி மேலும் தெரிய வருவதாவது வாஷிங்டனின் பயங்கரவாத நாடுகளின் பட்டியலில் பாகிஸ்தானையும் சேர்ப்பதா இல்லையா என்பது பற்றி இறுதி முடிவை கிளிண்டன் நிர்வாகம் மேற்கொள்ளும் வரை இத்தடை உத்தரவை அமுலாக்குமாறும் வாஷிங்டன் தனது நேட்டோ நேச அணி நாடுகளைக் கோரியுள்ளது.

## நடமாடும் வைத்திய சேவை

(வடமராட்சி)

கரவெட்டி இலங்கை செஞ்சிலுவைச் சங்கம் இன்று நடமாடும் வைத்திய சேவை ஒன்றை நடாத்தவுள்ளது.

காலை கட்டைவேலி அகதி முகாம், மாணிக்கவாசகர் அகதி முகாம்களிலும்- மாலை இலகடி முகாம், உடுப்பிட்டி முகாம், திக்கம் முகாம்களிலும் இவ் வைத்திய சேவை நடைபெறும். (யோ)

## எல்லையைக் கடக்க காஷ்மீர் மக்கள்கட்சி முடிவு

[இஸ்லாமாபாத்]

ஆசாத் காஷ்மீர் மக்கள் கட்சியை சேர்ந்த சுமார் ஆறாயிரம் பேர் எல்லையைக் கடந்து இந்தியாவின் ஆளுகையிலுள்ள ஜம்மு காஷ்மீர் பகுதிக்குள் ஊடுருவும் நோக்கத்துடன் பேரணி ஒன்றை நடத்தி வருவதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இப் பேரணியை ஏற்பாடு செய்துள்ள ஆசாத் காஷ்மீர் மக்கள் கட்சி முன்னாள் பிரதமர் பெனாசிர் பூட்டோ தலைமையிலான பாகிஸ்தான் மக்கள் கட்சியின் கீழ் செயற்பட்டு வருகின்றது என்பது குறிப்பிடத்தக்கதாகும்.

இப்பேரணியை தடுக்க பாகிஸ்தான் அரசும், இந்திய இராணுவமும் நடவடிக்கைகள் மேற்கொண்டிருப்பதாகவும் கூறப்படுகிறது. இதே வேளை இப்பேரணியை ஏற்பாடு செய்துள்ள ஆசாத் காஷ்மீர் மக்கள் கட்சியின் தலைவர் பொது மக்களிடையே பேசுகையில் ஜம்மு காஷ்மீரில் இந்திய இராணுவம் மனித உரிமைகளை மீறும் வகையில் செயற்பட்டு வருவதால் இந்தியா ஒரு பயங்கரவாத நாடு என்று அறிவிக்க வேண்டும் என்று சர்வதேச சமூகத்திடம் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

## கற்பூரக்

திக்குள் எடுத்து வருவதில் நேரடியாக சம்பந்தப்பட்டவரான மாரிமுத்து கந்தசாமி (கந்தன் வயது 42 பெண்டிக் கோஸ் வீதி, சூசைப்பிள்ளையார் குளம், வவுனியா) என்பவர் தொடர்ந்து விசாரணைக்கு உள்ளாகி வருகின்றார்.

இச் செய்தியானது முதலில் வெளியிடப்பட்டபோது வெடிபொருள் இருந்து எடுத்த இடம் வட்டக்கச்சி என தவறுதலாக வெளியிடப்பட்டுவிட்டது. உண்மையில் வட்டக்கச்சி பிரதான வீதியில் உள்ள கோவிந்தன் கடை சந்தி இரண்டாம் வாய்க்கால் என்ற கிராமத்தில் உள்ள இராசரத்தினம் ஜெயரத்தினம் (மாதா) என்பவரது வீட்டிலேயே குறிப்பிடப்பட்ட வெடிப் பொருள்கள் கண்டுபிடிக்கப்பட்டன. மேற்குறிப்பிடப்பட்ட இராசரத்தினம்ஜெயரத்தினம்(மாதா)

## உண்ணாவிரதம்

கள் பூஸா முகாமிற்குச்சென்று உறுதியளித்ததைத் தொடர்ந்தே அவர்கள் தமது உண்ணாவிரதத்தைக் கைவிட்டனர்

பூஸா முகாம் கைதிகளுக்கு ஆதரவாக உண்ணாவிரதம் மேற்கொண்ட பலவத்தை, பல்லேகல தடுப்பு முகாம் கைதிகளும் தமது உண்ணாவிரதத்தைக் கைவிட்டனர்.

பயங்கரவாத தடைச் சட்டத்தின்கீழ் இவர்கள் கைது செய்யப்பட்டுக் கடந்த இரண்டு வருடங்களுக்கு மேலாக நீதி விசாரணைஇன்றித் தடுத்து வைக்கப்பட்டுள்ளார்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

இதேவேளை பூஸா முகாமில் உண்ணாவிரதம் இருக்கும் கைதிகளில் ஏழு பேர் ஆபத்தான நிலையில் காலி ஆதார வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். இவர்கள் சுயநினைவை இழந்த நிலை

## 1000 மெற்றிக்

எம்.எச்.எவ்., ஆர் டி.எச்.எச். ஆகியவற்றிற்கும் பொருள்கள் எடுத்துவரப்பட்டுள்ளன.

மேற்குறித்த பொருள்கள் அடங்கிய பட்டியலில் தபால் திணைக்களத்திற்குத் தபாற் பொதிகள் வந்ததாகக் குறிப்பிடப்படவில்லை. கப்பலின் மேல் தளத்தில் இருந்து பாடசாலைத் தளபாடங்கள் முதலில் இறக்கப்பட்டன.

நேற்று மாலை காங்கேசன் துறைக்குத் திரும்பிச்சென்ற 'குமண' கப்பல் மீண்டும்நாளை பொருள்களை இறக்குவதற்காகப் பருத்தித்துறைக்கு வருமெனத் தெரிவிக்கப்படுகிறது அதுவரை 'குமாரி' கப்பலில் இருந்து பொருள்கள் இறக்கப்படும். (யோ)

## வீரச்சாவு

# கம்பன் விழா - 1993 4ஆம் நாள் நிகழ்ச்சிகள்

(யாழ்ப்பாணம்)

நல்லூரில் நடைபெற்றுக் கொண்டிருக்கும் கம்பன் விழாவில் 4ஆவது நாளான இன்று காலை 9-30 மணிக்கு நிகழ்ச்சிகள் ஆரம்பமாகவுள்ளன. இதில் வழக்காடு மன்றம் சிறப்பு நிகழ்ச்சியாக இடம்பெறும் மாலை 4-30 மணிக்கு மங்கள இசையுடன் ஆரம்பமாகும். நிகழ்ச்சியில் 'நற்றமிழ் முற்றம்'', ''இன்று சந்திக்கும் இவர்கள்'' என்பன இடம் பெறவுள்ளன.

# க. பொ. த. (சா/த) பரீட்சை பாடசாலை ரீதியாக முடிவு

[நமது நிருபர்]

க. பொ. த. (சா/த) 1992 பரீட்சைக்கான பெறுபேறுகள் நேற்று யாழ். மாவட்டத்தில் வெளியாகின. மேற்படி பரீட்சையின் தென்பகுதி பெறுபேறுகள் கடந்த 30 ஆம் திகதி கொழும்பில் வெளியாகியது தெரிந்ததே. இப்பரீட்சையில் யாழ். மாவட்டத்தில் தோற்றி சித்தியடைந்தோர் பற்றிய விபரங்கள் பாடசாலை ரீதியாக வருமாறு:

**யாழ். இந்துக் கல்லூரி**

தோற்றியோர் - 175
சித்தியடைந்தோர் - 170

| டி | எண்ணிக்கை |
|---|---|
| 8 | 07 |
| 7 | 15 |
| 6 | 22 |
| 5 | 27 |
| 4 | 36 |

**சுண்டிக்குளி**

தோற்றியோர் - 86
சித்தியடைந்தோர் - 79

| டி | எண்ணிக்கை |
|---|---|
| 7 | 01 |
| 6 | 08 |
| 5 | 09 |

**யாழ். மத்திய கல்லூரி**

தோற்றியோர் 252
சித்தியடைந்தோர் 158

| டி | எண்ணிக்கை |
|---|---|
| 6 | 01 |
| 4 | 03 |
| 3 | 06 |

**வேம்படி மகளிர் கல்லூரி**

| டி | எண்ணிக்கை |
|---|---|
| 7 | 08 |
| 6 | 09 |
| 5 | 09 |
| 4 | 11 |

**யாழ். இந்து மகளிர் கல்லூரி**

| டி | எண்ணிக்கை |
|---|---|
| 8 | 01 |
| 7 | 03 |
| 6 | 03 |
| 5 | 12 |
| 4 | 17 |

**கனகரட்ணம் ம. வித்.**

தோற்றியோர் - 115
சித்தியடைந்தோர் - 65

| டி | எண்ணிக்கை |
|---|---|
| 5 | 04 |
| 4 | 02 |
| 3 | 05 |

**யாழ். பத்திரிசியார் கல்லூரி**

தோற்றியோர் - 199
சித்தியடைந்தோர் - 108

| டி | எண்ணிக்கை |
|---|---|
| 8 | 02 |

**மடம் (தமிழ்)**

| டி | சி | எஸ் | எண்ணிக்கை |
|---|---|---|---|
| 3 | 5 | | 01 |
| 3 | 4 | 1 | 01 |

**செங்குந்தா இந்து**

தோற்றியோர் 104
சித்தியடைந்தோர் 39

| டி | சி | எஸ் | எண்ணிக்கை |
|---|---|---|---|
| 3 | 3 | 1 | 01 |
| 2 | 3 | 2 | 01 |

**கொக்குவில் இந்து**

| டி | சி | எண்ணிக்கை |
|---|---|---|
| 8 | | 02 |
| 7 | | 01 |
| 6 | 2 | 02 |
| 5 | 3 | 07 |

**தெல். மகாஜனாக் கல்லூரி**

தோற்றியோர் 213
சித்தியடைந்தோர் 100

| டி | சி | எண்ணிக்கை |
|---|---|---|
| 7 | | 01 |
| 6 | 1 | 02 |
| 5 | 2 | 05 |
| 4 | 3 | 05 |

**இணுவில் மத்திய கல்லூரி**

தோற்றியோர் 72
சித்தியடைந்தோர் 39

| டி | எண்ணிக்கை |
|---|---|
| 6 | 01 |
| 5 | 01 |

**கோப்பாய் கிறிஸ்தவ கல்.**

| டி | சி | எஸ் | எண்ணிக்கை |
|---|---|---|---|
| 5 | 2 | 1 | 01 |
| 4 | 2 | 2 | 02 |
| 3 | 3 | 2 | 03 |
| 2 | 3 | 3 | 07 |
| 2 | 2 | 4 | 07 |

**உடுவில் மகளிர் கல்லூரி**

தோற்றியோர் - 103
சித்தியடைந்தோர் - 86

| டி | சி | எண்ணிக்கை |
|---|---|---|
| 7 | | 03 |
| 7 | 1 | 01 |
| 6 | 2 | 01 |
| 6 | 1 | 03 |
| 5 | 2 | 04 |

**இராமநாதன் கல்லூரி**

தோற்றியோர் - 142
சித்தியடைந்தோர் - 45

| டி | சி | எஸ் | எண்ணிக்கை |
|---|---|---|---|
| 4 | 2 | 1 | 03 |
| 3 | 4 | 1 | 01 |
| 3 | 3 | 1 | 02 |
| 2 | 4 | 1 | 02 |
| 3 | 1 | 2 | 01 |

**தெல்லி. யூனியன் கல்லூரி**

தோற்றியோர் - 188
சித்தியடைந்தோர் - 92

| டி | சி | எஸ் | எண்ணிக்கை |
|---|---|---|---|
| 7 | | | 01 |

# மரண அறிவித்தல்கள்

## கனகசபை அம்பலவாணர்

மண்டைதீவு 2ஆம் வட்டாரத்தைச் சேர்ந்தவரும், தற்போது 238/11, K.K.S. வீதி (முட்டாஸ் கடைச்சந்தி) யாழ்ப்பாணத்தில் வசித்தவருமாகிய கனகசபை அம்பலவாணர் (இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனச் சாலை அதிபர் கிளிநொச்சி) அவர்கள் 4.4.93 நேற்று காலமாகிவிட்டார். இவர் புனிதவதியின் அன்புக் கணவரும் அனந்தரூபி [பலாலி ஆசிரியகலாசாலை அலுவலர்], நீலலோஜினி [கோப்பாய் ஆசிரியகலாசாலை அலுவலர்], கலைச்செல்வி, அங்கையர்க்கண்ணி [வேம்படிமகளிர் கல்லூரி]. ஆகியோரின் அன்புத் தந்தையுமாவார் ஈமக்கிரியைகள் அன்னாரின் வதிவிடத்தில் நடைபெற்று பூதவுடல் [ இன்று ] 5.4.93 பி.ப. 3. 00 மணியளவில் கோம்பையன் மணல் மயானத்திற்கு தகனக்கிரியைக்காக எடுத்துச் செல்லப்படும் இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
அ. அனந்தரூபி
[மகள்]

[4627]

## V. M. தம்பு அவர்கள்

கரம்பொன் கிழக்கைப் பிறப்பிடமாகக் கொண்டவரும், தற்போது நல்லூர் 181 அரசடியில் வசித்து வந்தவருமான பிரபல புகையிலை வியாபாரி V.M. தம்பு அவர்கள் 04 04-93 ஞாயிற்றுக்கிழமை காலமாகிவிட்டார். இவர் பத்மாவதியின் பாசக் கணவரும், காலஞ்சென்ற திரு. மயில்வாகனம், திருமதி முத்துப்பிள்ளையின் கனிஷ்ட புதல்வரும், திருமதி யோகசுந்தரா, திரு. சிவநாதன் (Australia), திருமதி விவேகசுந்தரா, திரு. சத்தியநாதன் (Australia), திருமதி அம்பிகா (U.K), திரு. கருணாகரன் (Australia), திரு. சுபாஸ்கரன் (U. K) திருமதி ஆனந்தி (U.K), ஆகியோரின் பாசமிகு தந்தையும், திரு. தியாகராஜா (Australia), திருமதி ரோகினி (Australia), Dr. கிருஷ்ணதாஸ் [முன்னாள் மாவட்ட வைத்திய அதிகாரி ஊர்காவற்றுறை], திருமதி சுமதி (Australia), திரு. யோகநாதன் (U.K), திருமதி லக்ஷ்மி (U.K), திரு. றமேஷ் (U.K), ஆகியோரின் பிரிய மாமனாரும், தயாளன் (U.K), சந்திரிக்கா, குணாளன், கஜன் (U.K), காயத்ரி, காருண்யா (Australia), வித்யா (Australia), ஜே (Australia), ஹரிகரன் (U.K), அனந்தி (U.K), சிந்துஜா (U.K), பைரன் (U.K) ஆகியோரின் அன்பு பேரனுமாவார்.

அன்னாரது ஈமக்கிரியைகள் இன்று (05-04-93) திங்கட்கிழமை முற்பகல் 10 மணியளவில் அன்னாரின் வதிவிடத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக கோம்பையன்மணல் மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளும்படி கேட்டுக் கொள்ளுகின்றேன்.

தகவல்:
Dr. S. கிருஷ்ணதாஸ்
[மருமகன்]
[முன்னாள் மாவட்ட வைத்திய அதிகாரி ஊர்காவற்றுறை, சட்ட வைத்திய அதிகாரி யாழ்ப்பாணம்]

181, அரசடி சந்தி,
நல்லூர்,
யாழ்ப்பாணம்.

[4628]

கோஸ் வீதி, சூசைப்பிள்ளையார் குளம், வவுனியா) என்பவர் தொடர்ந்து விசாரணைக்கு உள்ளாகி வருகின்றார்.

இச் செய்தியானது முதலில் வெளியிடப்பட்டபோது வெடிபொருள் இருந்து எடுத்த இடம் வட்டக்கச்சி என தவறுதலாக வெளியிடப்பட்டுவிட்டது. உண்மையில் வட்டக்கச்சி பிரதான வீதியில் உள்ள கோவிந்தன் கடை சந்தி இரண்டாம் வாய்க்கால் என்ற கிராமத்தில் உள்ள இராசரத்தினம் ஜெயரத்தினம் (மாதா) என்பவரது வீட்டிலேயே குறிப்பிடப்பட்ட வெடிப் பொருள்கள் கண்டுபிடிக்கப்பட்டன. மேற்குறிப்பிடப்பட்ட இராசரத்தினம்ஜெயரத்தினம்(மாதா) கிளிநொச்சிக்கும், ஓமந்தைக்கும் இடையே வழமையான வாடகைக்கு மோட்டார் சைக்கிள்ஓடுபவராகதொழில்செய்து வந்தார். வியாபாரிகள் என்ற போர்வையில் அவருடன் பழக்கத்தை ஏற்படுத்திக்கொண்ட கந்தசாமியும் மற்றவரும் அவரது குடும்ப நண்பர் என்ற அளவிற்கு தொடர்பினை நெருக்கமாக்கிக் கொண்டனர்.

தனது பொருட்களை கிளிநொச்சியில் விற்பதால் அதிக இலாபம் கிடைக்காது என்றும் சில நாட்கள் கழித்து யாழ்ப்பாணத்துக்கு எடுத்துச் செல்லும்வரை அங்கேயே இருக்கட்டும் என்று கூறி அப் பொருட்களை இராசரட்ணம் ஜெயரட்ணம் [மாதா] என்பவரிடம் ஒப்படைத்துவிட்டு திரும்பிச் சென்றனர். குறிப்பிட்ட மாதா பொருட்கள் அடங்கிய பையினை திறந்து பார்த்தாராயினும் அவரால் வெடி மருந்தினை அடையாளம் காண முடியவில்லை. வெடி மருந்து மணமற்ற, வெள்ளை நிறமான C-4 ரகத்தைச் சேர்ந்தது என்பதனாலும் அது கவனமாக கற்பூரத்துக்குள் சேர்த்து பொதிசெய்யப்பட்டு காவடி மார்க் கற்பூர அடையாள லேபில்களினால் ஒட்டப்பட்டு இருந்ததால் அவரால் எதையும் வித்தியாசமாக அடையாளம் காணமுடியாமல் போய்விட்டது.

மேற்கண்ட விடயங்கள் குறிப்பிடப்பட்ட அனைவரையும் விசாரணை செய்ததன் மூலம் அறியக்கூடியதாக உள்ளது. விசாரணை தொடர்ந்து நடைபெற்று வருகின்றது. இவ் விடயத்தினை உற்றுநோக்கும் போது இராசரட்ணம் ஜெயரட்ணம் (மாதா) கந்தையா கோபாலகிருஷ்ணன் (கோபால்) ஆகிய இருவரும் அதிக வருவாய் கிடைக்கும் என்ற நப்பாசையினால் இந் நயவஞ்சகர்களுடன் தொடர்பினை ஏற்படுத்திக்கொண்டுள்ளார்கள் என்பது தெரியவருகின்றது. அவர்கள் இருவரும் குற்றமற்றவர்கள் என்ற முறையில் விடுதலை செய்யப்படுகின்றார்கள்.

உளவாளிகள் பற்றி எமது மக்கள் எச்சரிக்கையாக இருக்கவேண்டும் என அறியத்தருவதுடன் மாதா, கோபால் ஆகியோரது அனுபவங்கள் எமது மக்களுக்கு நல்லபாடமாக அமையவேண்டும் எனவும் மக்கள் இதுவிடயமாக விழிப்பாக இருக்கவேண்டும் எனவும் கேட்டுக்கொள்கிறோம்.

னர்

பூஸா முகாம் கைதிகளுக்கு ஆதரவாக உண்ணாவிரதம் மேற்கொண்ட பலவத்தை, பல்லேகல தடுப்பு முகாம் கைதிகளும் தமது உண்ணாவிரதத்தைக் கைவிட்டனர்.

பயங்கரவாத தடைச் சட்டத்தின்கீழ் இவர்கள் கைது செய்யப்பட்டுக் கடந்த இரண்டு வருடங்களுக்கு மேலாக நீதி விசாரணைஇன்றித் தடுத்து வைக்கப்பட்டுள்ளார்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

இதேவேளை பூஸா முகாமில் உண்ணாவிரதம் இருக்கும் கைதிகளில் ஏழு பேர் ஆபத்தான நிலையில் காலி ஆதார வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். இவர்கள் சுயநினைவை இழந்த நிலையில் இருப்பதாக வைத்திய சாலை வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

எடுத்துவரப்பட்டுள்ளன.

மேற்குறித்த பொருள்கள் அடங்கிய பட்டியலில் தபால் திணைக்களத்திற்குத் தபாற் பொதிகள் வந்ததாகக் குறிப்பிடப்படவில்லை. கப்பலின் மேல் தளத்தில் இருந்து பாடசாலைத் தளபாடங்கள் முதலில் இறக்கப்பட்டன.

நேற்று மாலை காங்கேசன் துறைக்குத் திரும்பிச்சென்ற 'குமண' கப்பல் மீண்டும்நாளை பொருள்களை இறக்குவதற்காகப் பருத்தித்துறைக்கு வருமெனத் தெரிவிக்கப்படுகிறது அதுவரை 'குமாரி' கப்பலில் இருந்து பொருள்கள் இறக்கப்படும். (யோ)

## வீரச்சாவு

குகதாசன். சங்கிலியன் வீதி, நல்லூர்] வீரச்சாவு அடைந்தார்.

இவருக்கு தமிழீழ விடுதலைப் புலிகள் தமது வீரவணக்கத்தைத் தெரிவித்துக் கொள்கின்றனர்.

இவரின் வித்துடல் இன்று பிற்பகல் 3.00 மணி வரை அவரது இல்லத்திலும் பின்னர் 3.00 மணி முதல் கந்தர் மடம் அரசடி ஜனசக்தி சன சமூக நிலையத்தில் மக்கள் அஞ்சலிக்காக வைக்கப்பட்டு பின்னர் மாவீரர் துயிலும் இல்லத்துக்கு எடுத்துச் செல்லப்பட்டு புதைகுழியில் விதைக்கப்படும்.

## பாடசாலைகள்

துறைக் கொத்தணியில் இரு பாடசாலைகளுக்கு முடிவுகள் கிடைக்கவில்லை என தெரிவிக்கப்படுகிறது.

இதனைத் தொடர்ந்து சம்பந்தப்பட்ட பிரதிக் கல்விப் பணிப்பாளர்கள் கொழும்பில் தங்கியிருக்கும் யாழ். பிரதேச கல்விப் பணிப்பாளருக்கு வானொலிச் செய்தியை அனுப்பி வைக்க நடவடிக்கை எடுத்துள்ளனர். [பா].[நி]

| டி | எண்ணிக்கை |
|---|---|
| 5 | 09 |
| 4 | 11 |

யாழ். இந்து மகளிர் கல்லூரி

| டி | எண்ணிக்கை |
|---|---|
| 8 | 01 |
| 7 | 03 |
| 6 | 03 |
| 5 | 12 |
| 4 | 17 |

கனகரட்ணம் ம. வித்.

தோற்றியோர் - 115
சித்தியடைந்தோர் - 65

| டி | எண்ணிக்கை |
|---|---|
| 5 | 04 |
| 4 | 02 |
| 3 | 05 |

யாழ். பத்திரிசியார் கல்லூரி

தோற்றியோர் - 199
சித்தியடைந்தோர் - 108

| டி | எண்ணிக்கை |
|---|---|
| 8 | 02 |
| 7 | 01 |
| 6 | 01 |
| 5 | 03 |

யாழ். பரியோவான் கல்லூரி

தோற்றியோர் - 107
சித்தியடைந்தோர் - 96

| டி | எண்ணிக்கை |
|---|---|
| 8 | 02 |
| 7 | 09 |
| 6 | 10 |
| 5 | 13 |
| 4 | 09 |

திருக்குடும்ப கன்னியர் மடம் (ஆங்கிலம்)

| டி | சி | எண்ணிக்கை |
|---|---|---|
| 5 | 3 | 01 |
| 4 | 4 | 04 |
| 3 | 5 | 04 |

திருக்குடும்ப கன்னியர்

சித்தியடைந்தோர் - 86

| டி | சி | எண்ணிக்கை |
|---|---|---|
| 7 | | 03 |
| 7 | 1 | 01 |
| 6 | 2 | 01 |
| 6 | 1 | 03 |
| 5 | 2 | 04 |

இராமநாதன் கல்லூரி

தோற்றியோர் - 142
சித்தியடைந்தோர் - 45

| டி | சி | எஸ் | எண்ணிக்கை |
|---|---|---|---|
| 4 | 2 | 1 | 03 |
| 3 | 4 | 1 | 01 |
| 3 | 3 | 1 | 02 |
| 2 | 4 | 1 | 02 |
| 3 | 1 | 2 | 01 |

தெல்லி. யூனியன் கல்லூரி

தோற்றியோர் - 188
சித்தியடைந்தோர் - 92

| டி | சி | எஸ் | எண்ணிக்கை |
|---|---|---|---|
| 7 | | | 01 |
| 6 | 1 | | 01 |
| 6 | - | 2 | 01 |
| 5 | 3 | - | 02 |
| 5 | 2 | 1 | 01 |
| 5 | 2 | - | 05 |
| 4 | 3 | - | 01 |
| 4 | 2 | 1 | 02 |

வேலணை வைத்திலிங்கம் துரைச்சாமி வித்தியாலயம்

| டி | சி | எஸ் | எண்ணிக்கை |
|---|---|---|---|
| 4 | 3 | - | 01 |
| 4 | 1 | 3 | 01 |
| 3 | 3 | 2 | 01 |

மேற்படி பெறுபேறுகளில் சங்கீதம்/நடனம் ஆகிய பாடங்களுக்குத் தோற்றியோர்களுக்கான பெறுபேறுகள் வெளியாகவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

## உள்வந்த வெளிச்சென்ற வாகன இலக்கங்கள்

## 04-04-1993

எமது பதிவில் உள்ள கடைசி இலக்கம் 8928

வடபகுதிக்கு உள்ளே வந்த வாகன இலக்கங்கள்:

43-2666, 42-9345, 42-1059, 26-5760, 24 4701, 26-3118, 36 5826, 26-4683, 40-2780, 36-2867, 28-4367, 24-4992, 22-3088, 24-1259, 43-3854, 27-9779, 22-4895, 24-6480, 26 2585, 24-6280, 42-9625, 26-8917, 41-5979, 42-6511, 26-7546, 27-7419, 24-5127, 24 6348, 24-5119, 24-4707, 24-7672, 27-6692

வடபகுதிக்கு வெளியே சென்ற வாகன இலக்கங்கள்:

26-6197, 42-0266, 24-7327, 26-7307, 24-5241, 24-5774, 42-1019, 41-9652, 26-7039, 40-2249, 41-9111, 41-0976, 24-5437, 42-2323, 42-7975, 24-5036, 42-7312, 24-5454, 41-5668, 22-3887, 42-3615, 24-1040


# விக்னா கல்வி நிறுவனம்

52, ஸ்ரான்லி றோட், யாழ்ப்பாணம்.

(O/L வகுப்புக்களுக்குத் தனித்துவம் வாய்ந்த ஒரே நிறுவனம்)

**O/L** பிரிவு III

DAY CLASSES [8.00 – 2.00]

ஆரம்பம்: 08-04-93, 8.0 மணி

★ அனுமதிகளை முன்கூட்டியே பெற்றுக்கொள்ளவும்
★ வாரத்தில் 4 நாட்கள் நடைபெறும்
★ கணிதம், விஞ்ஞானம் வாரத்தில் 6 மணித்தியாலங்கள் நடைபெறும்
(சி-6336)★ இவ்வருடம் 5 பிரிவுகள் மட்டுமே ஆரம்பமாகும்.


அன்பு பேரனுமாவார்.

அன்னாரது ஈமக்கிரியைகள் இன்று (05-04-93) திங்கட்கிழமை முற்பகல் 10 மணியளவில் அன்னாரின் வதிவிடத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக கோம்பையன்மணல் மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளும்படி கேட்டுக் கொள்ளுகின்றேன்.

தகவல்:
181. அரசடி சந்தி, நல்லூர், யாழ்ப்பாணம்.
Dr. S. கிருஷ்ணதாஸ் [மருமகன்]
[முன்னாள் மாவட்ட வைத்திய அதிகாரி ஊர்காவற்றுறை, சட்ட வைத்திய அதிகாரி யாழ்ப்பாணம்]
[4628]

## திரு. சின்னவன் பொன்னையா

[ஓய்வு பெற்ற புகையிரதப் பகுதி காவலாளி]

திரு. சின்னவன் பொன்னையா (ஓய்வுபெற்ற புகையிரதப்பகுதி காவலாளி) காலமானார். இவர்மீனாட்சியின் அன்புக் கணவரும் காலஞ்சென்ற அன்ரனி, மேரிறோஸ், றோஸ்மேரி,புஸ்பரோஸா(பிரான்ஸ்) ராஜந்திரன்((B.A.) (பிரான்ஸ்), குணசிங்கம்(கனடா), வீரசிங்கம்(கனடா), ராஜசிங்கம் (கனடா), ஆகியோரின் அன்புத் தந்தையும் யோ. அன்ரனி (ஓய்வுபெற்ற புகையிரதப் பகுதி பொலிஸ்மன்), மா. யோண் (காணித் திணைக்களம் யாழ்ப்பாணம்), K. தாமோதரம் (பிரான்ஸ்), மேரிஆன் (பிரான்ஸ்), கிருபா (கனடா), குமுதா [கனடா], ஆகியோரின் அன்பு மாமனாரும், இயூஜின் மேரி, மேரிஸ்ரெலா, லியோநியூட்டன், சுதாகரன், நிரோஜிகன், மேரிநிரோஜினி, தர்ஸினி, யாழினி தர்மினி, ப்ரியா, பிரதீப், [பிரான்ஸ்], ஜெனிற்றா, டெஸ்மன் [கனடா], ஆகியோரின் பேரனும், கிங்ஸ்லி, றொஷான், பிறின்ஸ்லி, நிருஷன் ஆகியோரின் பூட்டனும் ஆவார். அன்னாரின் பூதவுடல் [05-4-93] இன்று திங்கட்கிழமை பிற்பகல் 3.00 மணியளவில் மாகியம்பதி புனித செபஸ்தியார் ஆலயத்திற்கு எடுத்துச் செல்லப்பட்டு அங்கிருந்து சேமக்காலைக்கு கொண்டு செல்லப்பட்டு நல்லடக்கம் செய்யப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவீனர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்.

''பொன்மஹால்'' மாகியப்பிட்டி, சண்டிலிப்பாய்
இப்படிக்கு மனைவி மீனாட்சி
[4630]

## சி. நல்லதம்பி

இருபாலையை வசிப்பிடமாகக் கொண்ட சி. நல்லதம்பி என்பவர் 4-4-93 நேற்று காலமாகிவிட்டார். அன்னார் தெய்வானையின் அன்புக் கணவரும் சாவீத்திரியின் அன்புத் தந்தையும் வீரசிங்கத்தின் அன்பு மாமனாரும் சிற்சபேசன் [ஜேர்மனி], கௌரி காலஞ்சென்ற கேதீஸ்வரி, நளாயினி, ரோகினி, ராகினி, ஆகியோரின் அன்பு பேரனுமாவார். அன்னாரின் ஈமக்கிரியைகள் இன்று [5-4-93] பி.ப. 2.00 மணியளவில் இருபாலை மயானத்தில் தகனம் செய்யப்படும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள், அனைவரும் ஏற்றுக் கொள்ளும்படி கேட்டுக்கொள்ளப்படுகின்றார்கள்.

அரசடி வீதி, இருபாலை கோப்பாய்
தகவல் : ச. வீரசிங்கம் [மருமகன்]
(4639)


இப் பத்திரிகை யாழ்ப்பாணம் மகேந்திரா வீதி, 31 ஆம் இலக்கத்திலுள்ள 'ஈழநாதம்' பணிமனையில் 1993ஆம் ஆண்டு, ஏப்ரல் மாதம் 05 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.